
# தமிழரசு


16.2.1979 50 காசு








# சென்னையில் குடியரசுநாள் அணிவகுப்பு
## 26-1-79







# கிராமப்புறங்களில் "எல்லோருக்கும் வேலை வாய்ப்பு"

சட்ட மன்றக் கூட்டு அவையில் ஆளுநர் உரை

மேன்மை தங்கிய சட்ட மன்ற உறுப்பினர்களே,

சட்ட மன்றத்தின் இணைந்த கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

தமிழ்நாட்டில் உணவு நிலைமை திருப்திகர மாக இருந்து வருகின்றது. நெல், அரிசி இவைகளுக்கு மாநிலத்திற்குள்ளே நடமாட்டத் தடையோ, கட்டுப் பாடோ ஏதும் கிடையாது. சம்பா பருவத்தில் இம் மாநிலத்தை விட்டு வெளியே வர்த்தகர்கள் கொண்டு செல்லும் நெல், அரிசி இவற்றில் 20 சதவீதம் அரசின் இருப்பிற்கு விற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு மட்டுமே தற்போது இருக்கிறது.

தமிழக அரசு, நெல்லுக்கு அதன் உற்பத்திக்கு ஆகும் செலவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நியாய மான அடிப்படை விலை நிர்ணயிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இது பற்றி பிரதமருக்கும், மத்திய வேளாண் துறை அமைச்சருக்கும் முதலமைச்சர் கடிதம் எழுதி அரசின் கோரிக்கையை வற்புறுத்தினார். இதன் விளைவாக முன்பு கொடுத்து வந்த குவின்டால் ஒன்றுக்கு 78 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக கட்டை ரக நெல்லுக்கு மத்திய அரசு அடிப்படை விலையை உயர்த்தியுள்ளது. இது விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்திக்குச் செலவிடும் தொகைக்குச் சமமாகக் கூட இல்லை. கோதுமையின் கொள்முதல் விலை சாகுபடி செலவை அனுசரித்து மத்திய அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்தில், அதே அடிப்படையில் நெல்லின் கொள் முதல் விலையையும், நிர்ணயிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் நியாயமான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாதது வருந்தத்தக்கது. அரசு நியாயமான விலை தரவேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. உற்பத்தியாளருக்கு நியாயமான விலையை நிர்ண

தமிழரசு

16-2-1979

மலர் : 9 இதழ் : 16

யிக்கும்போது, நுகர்வோர்க்கும் நியாயமான விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக, கோதுமைக்கு இதுவரை தரப்பட்டு வந்த அளவில், அரிசிக்கும் மானியம் தர மத்திய அரசு முன்வர வேண்டுமென்ற கருத்தை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

கிராமந்தோறும் ஒரு நியாய விலைக் கடை மூலம் அடிப்படைப் பொருட்களை விற்கும் அரசின் திட்டத்தின் கீழ் 31—1—1979 முடிய சுமார் 13,400 கிராமங்கள் பயன் பெற்றுவிட்டன. மீதமுள்ள கிராமங்களும் ஓரிரு மாதங்களுக்குள் பயனடையும். ஆண்டொன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் நிகரச் செலவில் செயல்படுத்தப்பட்டு, கிராம மக்களுக்கு பெரிய பலனைத் தரும் இத் திட்டத்திற்கு, மத்திய அரசு புதிதாகத் தீட்டியுள்ள தனது திட்டத்தின்கீழ் உதவ வேண்டும் என்பதே எனது கோரிக்கை. இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் என நம்புகிறேன்.

மின்சாரத்தை வழங்குவதில் மட்டுமின்றி, மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் அரசு மிகச் சிறப்பான கவனம் செலுத்தி வருகின்றது. 35 மெகாவாட் திறனுள்ள சுருளியாறு மின் நிலையமும், 110 மெகாவாட் திறனுள்ள குந்தா மின் திட்டத்தின் நான்காவது கட்ட நிலையமும் சென்ற ஆண்டு செயல்படத் தொடங்கியுள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் 210 மெகாவாட் திறனுள்ள முதல் இயந்திரம் விரைவில் மின்சாரம் வழங்கத் துவங்கிவிடும். மேட்டூர் அணைக்குக் கீழே ஆற்றில் பாசனத்துக்கு செல்லும் நீரினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய, நான்கு மின் நிலையங்கள் அமைப்பதற்காக அரசு தீட்டியுள்ள திட்டத்துக்கு மத்திய மின் ஆணைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தினால் மொத்தம் 120 மெகாவாட் திறனுள்ள இயந்திரங்களின் மூலம், ஆண்டொன்றுக்கு சராசரி 537 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான பணி தொடங்கப்பட்டுவிட்டது. காடம்பாறை நீரேற்றி மீண்டும் மின் உற்பத்தி செய்யும் நிலையம் அமைப்பதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

இயல்பான தென்மேற்குப் பருவமழையுடன் அமைந்தால், மின்சார வெட்டு ஏதுமின்றி, இந்த ஆண்டு மின்சக்தி வழங்க இயலும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மின்வெட்டு எதிர்காலத்தில் ஏற்பட நேரிட்டால், வேளாண்மைக்கு முன்னுரிமை தந்து மின் விசையேற்றங்களுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளித்து வருவதைப் போலவே, சிறு தொழில்களுக்கும் மின்வெட்டிலிருந்து விலக்களிக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. பரவலாக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் இக்கொள்கை முடிவினை மன்ற உறுப்பினர் அனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன்.

கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு கட்டுவதற்குத் தேவையான வீட்டு மனைகளை வழங்கும் புதிய பெரும் திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. பினாமி நிலங்களையும் தேவைக்கதிகமான நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உபரி நிலங்களையும் அரசு கைப்பற்றி, அந்த நிலங்களை இத்திட்டம் செயல்பட அரசு பயன்படுத்தும். இந்த நிலங்களைக் குடியிருப்புகளுக்குப் பயன்படுத்துவதற்காக தக்க வசதிகளுடன் கூடிய முறையான ஊரமைப்புத் திட்டங்கள் வகுக்கப்படும்.

மேலும், கிராமங்களில், அய்ந்தாண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட உதவும் திட்டமொன்றை வகுத்து, அரசு செயலாற்றத் தொடங்கி

யுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வருவாய்க் கோட்டம் (Revenue Division) ஒவ்வொன்றிலும் ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் கிராம மக்களுக்கு வீடு கட்ட கடனுதவி அளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட மக்களிடையே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு (Economically Weaker Sections), அதாவது ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவர்களுக்கு, 600 ரூபாய்க்கு மேற்படாமல் மானியமும் வழங்கப்படும். பல்வேறு வகுப்பினரும் இணைந்து வாழ்வதற்கு ஊக்கமளிப்பதே அரசின் கொள்கையாகும். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வீடு கட்டும்போது, மற்ற பிரிவினருக்கும், இதைப் போலவே மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் அவ்வப்பகுதிகளில் கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் வீடுகள் கட்டப்படும். வீடு கட்ட கடன் பெறுவோர் பணமாகவோ, உழைப்பாகவோ வீட்டின் விலையில் 20 சதவீதம் தங்கள் பங்காகச் செலுத்துவார்கள்.

கிராமப் பகுதிகளிலும் புதிய கிராமங்களை உருவாக்கவும், தற்போதுள்ள கிராமங்கள் திட்டமிட்ட முறையில் விரிவாக்கப்படுவதற்கும் ஊரமைப்புத் திட்டங்கள் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது. நகரங்களும் நகரை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளும் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களில் முறையான வளர்ச்சி ஏற்படவும், அதனடிப்படையில் குடிநீர் வடிகால் வசதி, கல்வி வசதி, தெருவிளக்கு வசதி போன்ற தேவையான வசதிகளுடன் கிராமங்கள் மிளிரவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும். வரும் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அய்ந்து ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். விரைவில் மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும்.

கிராமப் புறங்களில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து, படித்த, படிக்காத இளைஞர்கள், சிறு விவசாயிகள், நிலமற்றோர் அனைவரும் தங்களது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பெறுவதோடன்றி, நிகழ் காலத்தில் நிலவும் விரக்தி மனப்பான்மையை அறவே போக்கிட அரசு தீர்மானித்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். கைத்தொழில் ஏதும் தெரியாமல் வெறும் கூலி வேலையை மட்டும் செய்து வாழ்வோர், தொழில் கற்று, தம்மை நம்பி வாழ்ந்திடும் நிலை உருவாகிடல் வேண்டும். அரசு தீட்டுகின்ற திட்டங்களின் பலன்கள், நியாயமாகச் சென்று சேரவேண்டியவர்களுக்குச் சென்றிடல் வேண்டும். இலட்சக் கணக்கில் வேலை வாய்ப்பின்றி உழன்று கொண்டிருக்கும் வேதனையான சுழற்சியில் சிக்கித் தவிப்பவர்கள் பலனடையும் குறிக்கோளின் அடிப்படையில், ஊராட்சி ஒன்றிய அடிப்படையில், "எல்லோருக்கும் வேலை வாய்ப்பு" என்ற முறையில் வரும் ஆண்டிலிருந்து வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டமொன்றை (Employment Guarantee Scheme) செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம், கிராமப் பகுதிகள் பெறப்போகும் புதிய மறு மலர்ச்சி, மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்வூட்டும் என நம்புகிறேன்.

கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் பட்டுத் தொழில் வளர்ச்சி சிறப்புற நடைபெறுவதற்காக தனியாக பட்டுத் தொழில் இயக்குநரகம் ஒன்றை அரசு அமைக்க முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு 4,000 ஏக்கர் பரப்பளவில் புதிதாக முசுக்கட்டை வளர்க்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு கூடுதலாக 8,000 ஏக்கரில் முசுக்கட்டை பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள், 8 மாவட்டங்களில் பணி ஆற்றத் துவங்கி 6 மாத காலத்திற்குள்ளாகவே

900-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் உற்பத்தி துவங்குவதற்கு உதவி செய்துள்ளன. இவற்றின் மூலம் ஏறக்குறைய 11,000 பேர் புதிய வேலை வாய்ப்புப் பெற்று உள்ளனர். சிறிய அளவில் கடன் வாங்கு வோருக்கு நிதி உதவி உடனடியாகத் தருவதற்கு உதவும் வகையில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் திருச்சிராப்பள்ளி, கடலூர், தருமபுரி ஆகிய ஊர்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்துள்ளது. மேலும் பல்வேறு கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதற்கும், இவற்றில் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதில் தனிக் கவனம் செலுத்தவும் கிராமத் தொழில் பிரிவு ஒன்று தனியாக இயங்கும்.

வேதாரண்யம் பகுதியில் 6,000 ஏக்கர் நிலப் பகுதியில் பெரியதொரு நவீன உப்புத் தொழிற்சாலையை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. சுமார் மூன்று ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றி முடிக்கப் பெற இருக்கும் இத் திட்டம், நூற்றுக்கணக்கானோர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கும். கல்பாக்கம் அனல் மின் நிலையத்தின் குளிர்விப்பு நீரின் (coolant water) அடிப் படையில், பக்கிங்ஹாம் கால்வாயின் இரு மருங்கிலும் மேலும் உப்பளங்களை அமைப்பதற்கான வாய்ப்பு களையும் அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

கிராமச் சிறு கைத்தொழில்களை ஏற்படுத்த முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப் படையான பெரிய தொழில்களை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் அரசு பின்தங்கிவிடவில்லை. தக்க பெரிய தொழில்கள் அமைப்பதற்கும் அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்துவரும். கனிப் பொருள் வளத்தை நன்கு பயன்படுத்துவதற்காக அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கனிவள நிறுவனம் (Tamil Nadu Minerals Limited) பல இடங்களில் சுரங்க வேலைகளை ஆரம் பித்து, கருப்புக்கல் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. நாட்டிலேயே அரிதாகக் கிடைக்கும் மாக்னசைட் கனிப் பொருளை சீரிய முறையில் வெட்டியெடுப்பதற்காக தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் அரசுத் துறை யில் நிறுவப்பட்டு, அது தன் பணிகளை சில நாட்களுக்கு முன் தொடங்கியுள்ளது. வெட்டியெடுக்கப்படும் கனிப் பொருளை பயன்படுத்த கூட்டுத் துறை நிறுவனம் ஒன்றும் உருவாகி வருகின்றது. இந்திய நாட்டுக் கப்பல்களும், அயல்நாட்டுக் கப்பல்களும் பயன் படுத்தத் தக்க வகையில், கப்பல்களைப் பழுது பார்ப்பதற்கேற்ற உலர் கப்பற்கூடம் (Dry Dock) ஒன்று தமிழ் நாட்டில் அமைப்பதற்கான செயற் குறிப்புகளை மத்திய அரசுடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகின்றது.

தூத்துக்குடியில் உப்பை மூலப்பொருள்களுள் ஒன்றாகக் கொண்டு, மொத்தம் 35 கோடி ரூபாய்ச் செலவில் உருவாக இருக்கும் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் நிறுவனம், மத்திய நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை களை முனைப்பாக மேற்கொண்டு வருகின்றது. ஜப்பானிய நாட்டு, ஹிட்டாசி ஜோஷன் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங் களும் அண்மையில் முதலமைச்சர் முன்னிலையில் டோக்கியோவில் கையெழுத்திடப்பட்டன. நாட்டில் இன்று மிகவும் தேவைப்படும் சோடா ஆஷ், இரசாயன உரங்கள் இவற்றை சுமார் 16 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு ஒன்றில் இத் தொழிற்சாலை உற்பத்தி செய்யும்.

கரும்புச் சக்கையை வெறும் எரிபொருளாக மட்டும் பயன்படுத்தாமல் அரிய மூலப்பொருளாக பயன்படுத்தி செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யும்

அரசுத் திட்டம் பற்றி மன்ற உறுப்பினர்கள் முன்பே அறிவர். காட்டு வளம் குறைவாக உள்ள நம் நாட்டில், இவ்வாறு மாற்று மூலப் பொருளை பயன்படுத்துவதற்கு ஊக்கம் அளிப்பதன் உடனடி அவசியத்தை உணர்ந்த மத்திய அரசு, கரும்புச் சக்கையை மூலப் பொருட்களில் முக்கால் பங்கிற்கு மேல் பயன்படுத்தும் காகித ஆலை களுக்குச் சிறப்பான பல சலுகைகள் அளிப்பதாக சில நாட்களுக்கு முன்பு அறிவித்துள்ளது. புதிய ஆலை நிறுவுவதற்கான முன் அனுமதிக் கடிதம் கோரி, மத்திய அரசுக்கு நமது அரசு விண்ணப்பித்துள்ளது.

வேலையற்றிருப்போர் எண்ணிக்கை மிகுதி யாகவும் அரசினர் வேலை வாய்ப்புகள் குறைவாகவும் உள்ள நிலையில், ஏழை எளியவர்களின் மக்களுக்கு, அதிலும், அவர்களிடையே பள்ளிகளின் வாயிற்படி களையே கண்டறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர் களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று அரசு விரும்பு கிறது. தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்க்கான சிறப்புச் சலுகைகட்கு சரிவேற்படாமல், இதனை அரசு நடைமுறைப் படுத்தும். இதன்மூலம் தலைமுறை தலைமுறையாக வாய்ப்புகளை இழந்து நிற்கும் மக்களின் புதிய தலைமுறையினர், புத்துணர்வும் புது வேகமும் பெறும் வாய்ப்பு கிடைக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

அரசின் இயக்குநரகங்களும், அரசு நிறுவனங் களின் தலைமையிடங்களும் சென்னையிலேயே குவிந்து இருப்பதை விடுத்து, தக்க இடங்களில், மாநிலத்தில் பரவலாக அமைய வேண்டுமென்பது அரசின் கொள்கை. இந்த கொள்கையின் அடிப்படையில், அரிசன வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் விழுப்புரத் திற்கு மாற்றப்பட்டுள்ளது. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம் திருச்சிக்கு மாற்றப் பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்படவிருக்கும் பட்டுத் தொழில் இயக்குநர் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவார். இக்கொள்கையின் அடிப் படையில் மேலும் அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு புதியதொரு மாவட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற அரசின் முடிவு, பெரியாரது நூற்றாண்டு விழாவின்போது அறிவிக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை எடுக்க தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, விரைவில் இந்த மாவட்டம் செயல்படத் துவங்கும்.

இன்றைய வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில், நிர்வாகப் பயிற்சி பெற்ற பலர், அரசுப் பணிகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும் தேவைப்படுகின்றனர். பெருகி வரும் இந்தத் தேவையை ஈடுகட்ட உதவும் வகையில், சென்னையில் நிர்வாகப் பயிற்சி நிலையம் (Madras Institute of Management) ஒன்றை, அரசு, அரசு நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோரது கூட்டு முயற்சியில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. பொது மக்களும், மத்திய அரசும் இதற்கு மனமுவந்து உதவி செய்து, இதன் வளர்ச்சியில் பங்கேற்பர் என நம்புகிறேன். முதற் கட்டமாக அரசு அலுவலர், அரசு நிறுவனங்களில் பணி புரிவோர் ஆகியோரைப் பயிற்றுவிக்கும் வகையில் இந்த கல்லூரி விரைவில் செயல்படத் துவங்கும்.

அயல்நாடு சென்று, பெருமையுடன் சீரிய பணியாற்றிவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பலர், தாயகத்தின் வளர்ச்சிக்கு தங்களாலான செயல்களைச் செய்ய எவ்வளவு ஆர்வமுடன் உள்ளனர் என்பது அண்மையில் முதல்வர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணத்தின் போது தெளிவாகத் தெரிந்தது.

வளர்ந்து வரும் அறிவியல் கருத்துக்களை நன்கு அறிந்த அத்தகையோரது ஆர்வமும் முயற்சிகளும் அவர்கள் இடையிடையே தாயகம் வந்து செல்லும் போது, தமிழ்நாட்டுக்குப் பயன்படும் வகையில் ஏற்ற செயல் திட்டங்களைத் தமிழக அரசு உருவாக்கி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்பு கின்றேன்.

சென்னையிலும், நீலகிரி மாவட்டத்திலும், பாம்பனை ஒட்டிய கடற்கரைப் பகுதிகளிலும், குறுகிய காலத்தில் பெய்த பெருமழை காரணமாக, உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் ஏற்பட்ட சேதங்கள் மன்ற உறுப்பினர்கள் நெஞ்சங்களை விட்டு அகன்றிருக்காது. போர்க்கால நடவடிக்கைகளைப் போல, அரசு இயந்திரம் செயல்பட்டதையும், பொது நிறுவனங்களும், அனைத்துத் துறையினரும் விவேகத்தோடு, ஏற்கனவே பெற்ற அனுபவ அடிப்படையில் திறமையாகச் செயல்பட்டதையும் இங்கே நான் குறிப்பாகப் பாராட்ட விரும்புகிறேன். மைய அரசின் உதவி, ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீட்டளவிற்குக் கிடைக்கா விட்டாலும், மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று ஆய்வுக் குழு ஒன்றை உடனடி அனுப்பி வைத்து, 10 கோடி ரூபாய் வழங்கியதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

சென்ற பருவ மழையின்போது, சிவகாசிப் பகுதியில், ஏற்பட்ட விபத்தில் பல இளந்தளிர்களை இயற்கை காவு கொண்டது. நமது நெஞ்சங்களைப் பற்றியெரியச் செய்துவிட்ட பயங்கரமான இந்த நிகழ்ச்சியின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் இதயத்தில் ஏற்பட்டுவிட்ட காயம் அவ்வளவு விரைவில் ஆறக்கூடிய தல்ல. சின்னஞ் சிறு பிள்ளைகளை வேலைகளில், குறிப்பாக வெடி மருந்துகளைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் ஈடுபடுத்தக் கூடாது என்ற சட்டத்தை சில தொழிலதிபர்கள் மீறி வருவதை எனது அரசு வன்மையாகக் கண்டிக்கிறது ; தொடர்ந்து மீறுதல் சட்டத்தின் கவனத்தை ஈர்க்கும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அண்மையில் தமிழகத்தைத் தாக்கிய பெரும் புயல், மழை, அண்டை நாடான ஸ்ரீலங்காவையும் வெறி கொண்டு தாக்கி நூற்றுக்கணக்கானோர் வாழ்விழக்கவும், பண்டங்களை, உடைமைகளைப் பறி கொடுக்கவுமான நிலை ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள். மனிதாபிமான அடிப்படையில், பிறருக்குத் துயரோ, இடரோ, இடுக்கண்ணோ ஏற்படும்போது தன்னை வருத்திக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவிடும் பண்பாடு பெற்ற தமிழகத்தின் சார்பாக, பத்து இலட்சம் ரூபாய் பெறுமான பல பொருட்களை, அரசு ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி வைத்தது; அவர்களின் துயர் துடைக்கும் முயற்சியில் தனது எளிய பங்கினைச் செய்ததன் மூலம் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. தமிழக அரசு, தனது கடமையினைச் செய்வதற்கு உறுதுணையாகவிருந்த, இந்திய அரசிற்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, அக்கொள்கையை தீவிரமாகச் செயலாக்குவதற்காக அண்மையில் அவசரச் சட்டமொன்றை பிறப்பித்துள்ளது. வார்னீஷ் போன்ற பொருட்களை அரசைச் சார்ந்த நிறுவனங்கள் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்பதோடு, கள்ளச் சாராயத்தின் விளைவாக உயிரிழப்பு நேரிடின், அதற்குக் காரணமான

வர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும் இந்த அவசரச் சட்டம் வகை செய்கின்றது. பல்வேறு மதுவிலக்குக் குற்றங்களுக்கு குறைந்த பட்ச தண்டனைகள் கொடுக்க வேண்டிய நிலையையும் இச்சட்டம் ஏற்படுத்தியுள்ளது. மேலும் தொடர்ந்து கடுமையான குற்றங்களில் ஈடுபடுவோர்களை, அவர்கள் வழக்கமாக வசிக்கும் பகுதியிலிருந்து மாறி வேறிடத்தில் வாழ்ந்தாக வேண்டிய நிலைக்கும் இது வழி செய்கின்றது. எதிர்பார்த்த பலனையும் ஓரளவுக்கு இந்த அவசரச் சட்டம் அளித்துள்ளது. அடித்தளத்து மக்கள் வாழ்வு உயர உதவும் மதுவிலக்கைச் செம்மையாக செயல்படுத்த உதவும் இந்த அவசரச் சட்டத்தை, இடைக்காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாகச் சில மாற்றங்களுடன், சட்டமாக்க அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மன்ற உறுப்பினர்கள் இந்த உயரிய நோக்கம் நிறைவேற தங்களது மேலான கருத்துகளைக் கூறி இதனை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையை நன்கு செயல்படுத்துவதற்காக காவல்துறையைச் சீரமைத்து, பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது.

நிர்வாகத்திலும், பிற துறைகளனைத்திலும் ஊழல் களையப்பட வேண்டுமென்பதில் அரசு திடமான நம்பிக்கை கொண்டுள்ளதை மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் விளைவாகவும் மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பின் காரணமாகவும் நல்ல பலன்கள் ஏற்பட்டு வருகின்றன.

தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றைப் பேணி வளர்த்திட அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் ஈ. வே. ரா. அவர்களாலும், மற்ற பல தமிழறிஞர்களாலும் கூறப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அண்மையில் அரசு செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து இதனைப் பரவலாக செயல்படுத்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். முதன் முறையாக தமிழ் மொழி சுருக்கெழுத்து அகர வரிசை ஒன்றை இன்னும் சில மாதங்களில் தமிழ் பாடநூல் நிறுவனம் வெளியிடும். திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள திராவிட மொழி ஆராய்ச்சி சங்கத்திற்கு (International Association of Dravidian Linguistics) கட்டிடம் கட்டுவதற்காகவும், பணிகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதற்காகவும் அரசு மானியம் வழங்கியுள்ளது. மதுரையில் வரும் ஆண்டில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கான ஆரம்ப வேலைகளை முனைப்பாக மேற்கொண்டு, முதற்கட்டமாக 50,000 ரூபாய் நிதி உதவியையும் அரசு அளித்துள்ளது. மேலும் அரசுக் கலைஞர்களாக எட்டு கலை விற்பன்னர்களை அரசு அண்மையில் பாராட்டி, பரிசுகளும், உதவித் தொகையும் வழங்கியுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியதாகும்.

இந்தி மொழி எவர் மீதும் சுமத்தப்படலாகாது என்பதிலும், இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் பின்பற்றப்பட வேண்டுமென்பதிலும் இந்த அரசு அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. மொழித் திணிப்பு ஏற்றுக் கொள்ளப்படலாகாது என்பதில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் ஒருமித்த எண்ணம் கொண்டுள்ளன என்பது வெளிப்படையாகும். இக்கருத்துக்களை ஒருமுகப்படுத்துவதற்கு அண்மையில் அரசு கூட்டிய அனைத்துக் கட்சிகள் மாநாடு ஏற்றதொரு செயலாகும். கட்சி வேறுபாடின்றி தமிழக மக்கள் அனைவரின் உள்ளக் கிடக்கையை பிரதிபலிக்கும் வகையில் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கு சட்ட மன்றம் உறுதுணையாக செயல்படுமென நம்புகிறேன்.

ஜனநாயக அமைப்பு முறையில், கருத்துப் போராட்டங்கள் ஏற்படுவது இயற்கை ; ஆக்கபூர்வ

மான முடிவிற்கும் செயலாற்றலுக்கும், அவை தவிர்க்க முடியாதவை. எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளும் போதும் அவைகளை எடுத்து வைக்கும் முயற்சிகளின் போதும், நபருக்கு நபர், கட்சிக்குக் கட்சி, கடைப்பிடிக்க வேண்டிய நெறி, காந்திய நெறி, அண்ணா வழி என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்திருக்க முடியாது ; பிரச்சினைகளுக்குப் பரிகாரம் பழி வாங்கிடும் வன்முறை உணர்ச்சியின் மூலம்தான் முடியும் என்ற அபாயகரமான போக்கிற்கு நிச்சயமான முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அமைதிக்கும், ஆழ்ந்த சிந்தனைக்கும், நயத்தக்க நாகரீகத்திற்கும். நாடு போற்றிடும் நன்னோக்கிற்கும் தனிப் பாரம்பரியம் பெற்ற தமிழகத்தில் அண்மைக் காலமாக சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது எனது அரசிற்கு வேதனையைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர், திரு முருகையன் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி மெத்த வேதனையைத் தருகிறது. கொலைக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுமிராண்டித்தனமான இந்தக்கொலை வெறியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ, மொழி, சாதி, மதம் காரணமாகவோ தமிழகம் அமைதி இழக்காத அளவிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி, மனம் திறந்து விவாதித்து, ஏற்புடைத்தான நல்ல சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்கவேண்டும் என மக்களின் பிரதிநிதிகளாகிய உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டமன்றத்தின் இக் கூட்டுத் தொடரில் மிக முக்கியமான அவசரச் சட்டங்களும் மசோதாக்களும் மாண்புமிகு உறுப்பினர்களின் ஆய்விற்கும், தொடர்ந்து பிரச்சினைகள் பற்றி விளக்கம் அளிக்கும் வாய்ப்பும் தோழமை உணர்வோடு, ஜனநாயகப் பண்போடு கலந்துரையாடும் சந்தர்ப்பங்களும் ஏராளம் கிடைக்க விருக்கின்றன.



தமிழக மக்களின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு, அவர்கள்தம் வாழ்வு மேலும் சிறப்புடன் விளங்க, இல்லங்கள் தோறும் மகிழ்ச்சியும் மன நிறைவும் ஏற்பட, நிம்மதி எழுந்தோங்க, மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்பட்டு, உண்மையான ஜனநாயக உணர்வின் உறையுளாக தமிழகம் நடைபோட நிச்சயம் உங்கள் பணி அமையும் என மனதார நம்புகிறேன்.

வணக்கம்.

*[1979-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு ஆளுநர் ஆற்றிய உரை.]*

# அழிவுக்கு அடிகோலும் மொழிவெறி

# குடியரசுத் தலைவரின் எச்சரிக்கை

குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவி ரெட்டி அவர்கள் தெற்கு டில்லியில் 14-2-79 அன்று மோதிலால் நேரு கல்லூரிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். அவ்வமயம் அக்கல்லூரி முதல்வரும் மற்றும் விழாவின் முக்கியஸ்தர்களும் இந்தியில் பேசினார்கள். இப்போக்கினால் குடியரசுத் தலைவர் மன வேதனையடைந்து, தன்னுடைய உரையை அவருடைய தாய் மொழியாகிய தெலுங்கு மொழியில் துவக்கிப் பேசிவிட்டு, பின்பு ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார்.

குடியரசுத் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டதாவது: ''நான் காரியமாகத்தான் தெலுங்கில் என் உரையைத் துவக்கினேன். ஏனெனில் என் தாய் மொழியை நான் நேசிக்கிறேன். அது தவறு என்று யாரும் சொல்ல முடியாது. மொழி குறித்து நம்மிடையே நிலவும் குறுகிய மனப்பான்மை எந்த வகையிலும் நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக இருக்கக் கூடாது.

இக்கல்லூரி முதல்வர் இந்தியில் என்ன பேசினார் என்பதை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் என்ன பேசினார் என்பது எனக்குத் தெரிந்திருக்குமேயானால் உங்களுடைய சாதனைகளைப் பாராட்டி என்னால் பேசியிருக்க முடியும்.

அனைவருக்கும் உங்களுடைய முதல்வர் என்ன பேசினார் என்பது தெரியவேண்டாமா? மற்றவர்களுக்குப் புரிந்தாலும் புரியாவிட்டாலும் பரவாயில்லை; அழகான இந்தியில்பேசினால்போதும் என்று தனக்குத் தானே அவர் திருப்திப்பட்டுக் கொண்டால், அது மட்டும் போதுமா?

மிகுந்த மனவேதனையுடன் இதைக் கூறுகிறேன். மெல்ல மெல்ல ஒரு குறுகிய மனப்பான்மைக்கு நாம் ஆளாகிக் கொண்டு வருகிறோமோ என அஞ்சுகிறேன்.

அண்மையில் மிசோராம் மாநிலத்தில் நான் சுற்றுப்பயணம் செய்தபொழுது அங்கே கறுப்புக் கொடி காட்டினார்கள். அகில இந்திய போட்டித் தேர்வுகளைத் தங்களுடைய தாய் மொழியில்



எழுத முடியவில்லை என்பதற்காக அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 'மிசோ' மொழி சேர்க்கப்படவில்லை.

மிசோ மக்கள் நல்லவர்கள். அவர்கள் அதிருப்தி நியாயமானதே. ஆனால், இப்படிப்பட்ட பிரச்னைகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இப்பிரச்னைகளை நான் பிரதமரிடம் கலந்து விவாதிக்கலாம் என்றுள்ளேன்.

பல மொழிகள், பல்வேறு கலாச்சாரங்கள் இருந்தாலும், இந்தியா ஒன்றுபட்ட ஒரு நாடாகும். ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த நாட்டு இளைஞர்களின் சிந்தனை ஓட்டம் சிறிய சிறிய விஷயங்களிலேயே செல்லுமானால், அதன் விளைவால் பாரதத் திருநாடு பல துண்டுகளாகப் பிரிந்து போனால், இந்த நாட்டின் எதிர்காலம், துயரம் நிறைந்த சோகவரலாறு ஆகி விடாதா?

என்னைப் பொறுத்தவரை மொழி ஒரு பிரச்னையே இல்லை. நான் ஒரு மொழி வெறியனும் இல்லை. சபாநாயகராக இருந்த பொழுது உறுப்பினர்கள் இந்தியில் பேசுவதை பல தட்வை கேட்டுள்ளேன். தலை சிறந்த இந்தி நாவலாசிரியர் பிரேம் சந்த் அவர்களின் இந்தி நாவல்களை நான் படித்துள்ளேன். நான் ஓர் இந்தியன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன்.

ம்முடைய இலட்சியம் நம் தாயகம் மேலும் சிறப்புற வேண்டும் என்பதாக இருக்க வேண்டும் 'மண்ணிலிருந்து நம்மையெல்லாம் மனிதராக்கினார்' மகாத்மா காந்தி. அந்த மண்ணிலிருந்து கிளர்ந்தெழுந்த ஒருவன் தான் நான்.

கட்டிடத்தின் அடிக்கல்லினை நான் இப்பொழுது நாட்டிவிட்டேன். அதைக் கட்டி முடிக்க வேண்டியது இளந்தலைமுறையினரின் பொறுப்பு. ஆனால், மொழி அடிப்படையில், இக் கட்டடத்தைப் பல துண்டுகளாகப் பிரித்து விடுவீர்களேயானால்-அந்தப் பிளவு நம் நாட்டையே அழித்துவிடும்.''

# உள்ளதை இழக்க ஒருபோதும் சம்மதியோம்!



பேரறிஞர் அண்ணா

"நமது மொழி தமிழ் மொழி தொன்மைமிக்கது, மென்மைமிக்கது. வளம் பெற்றது. வலிமை பெற்றது. வலிவும், பொலிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைத்தது தமிழ். பல மொழிகளுக்குத் தாயக மான அத்தகைய தமிழை, தமிழின் சிறப்பைப் பல பகுதிகளிலும் உள்ளோர் ஓரளவு அறிந்துள்ளார்கள். பெரும் அளவு, முழு அளவு தமிழின் சிறப்பை, மாண்பை உலகம் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு ஆவன செய்ய இந்த மாநாடும், மாநாட்டில் நடக்கும் ஆராய்ச்சியும் உதவும் என நம்புகிறேன். இத்தமிழ் ஆராய்ச்சியால் புதிய கட்டம், நல்ல கட்டம் ஏற்படுத்தப்படும் என நம்பலாம். இந்த ஆராய்ச்சியின் பயன், பல காலமும் தமிழ் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தமிழர் வாழ்வுக்கும் வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் பேசுகையில் முதல் மாநாட்டையே இங்கே நடத்தியிருக்க வேண்டும் என்றார். உண்மைதான். ஏனோ அந்த வாய்ப்பு கிட்டாமல் போய் விட்டது. மலேசியாவில் நடந்த முதல் மாநாட்டில் 20 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2-வது மாநாட்டிற்கு 30-க்கும் மேற்பட்ட வெளி நாட்டினர் கலந்து கொண்டுள்ளனர். ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து ஆராய்ச்சி வல்லுநர்கள் சென்னை வந்துள்ளனர்.

இத்தனை நாடுகளுக்கும் அறிமுகமாயுள்ள தமிழ் மொழி இந்தியாவுக்குள்ளேயே இன்னும் பல பகுதிகளில் இடம் பெற முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். செக்கோஸ்லோவேகியாவில் தமிழ்மொழி வியந்து பாராட்டப்படுகிறது அமெரிக்கர்கள் அறிந்து போற்றுகின்றனர் பிரிட்டிஷ், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது என்றெல்லாம் உணரும்போது, உணர்ச்சியால் விம்மும் நமது உள்ளம் நம்மை எங்கேயெல்லாமோ இட்டுச் செல்கிறது. இன்றுள்ள நிலையை எண்ணும்போதுதான், இருக்கின்ற இடத்திற்கு வருகிறோம். தமிழர் தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் வரலாற்றை அறிந்து ஆற்றலுடன் அறிவுடன் ஒன்றுபட்டு பெரும் முயற்சி செய்தால், நிச்சயம் அந்த இடத்திற்கு நாம் செல்வோம்.

உலகில் மொழி அறிவு தோன்றியிராத காலத்தில், மொழி இலக்கியம், மொழி இலக்கணம் பெற்றிருந்தது தமிழ். எட்டுத்தொகை என்றும், பத்துப்பாட்டு என்றும், பதினெண் கீழ்க்கணக்கென்றும் பெற்றிருந்தோம். ''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் குறளுக்குச் சொந்தக்காரர்களாக நாம் இருந்தோம். அத்தகைய தமிழுக்குப் புதிய வலிவும் பொலிவும் இந்த மாநாட்டினால் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மாநாட்டில் நடந்த, நடக்கின்ற அரிய நிகழ்ச்சிகளைக் கண்டும் தமிழ் ஆராய்ச்சி, கருத்தரங்கு உரைகளின் சிறப்பைக் கேட்டும் புதுப்பயன் பெறலாம்.

நாம் அடைந்துள்ள இந்த அக மகிழ்ச்சி மற்றவர்கள் கருதுவது போல இல்லாமல், தமிழ் வளம்பெற, தமிழ் வளர்ச்சியுற வேண்டிய வழியினை, வகையினைக் காணப் பயன்படுத்தப்படும் என உறுதி கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது தமிழ்மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும், முடிவுகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன் படுத்திக் கொள்வோம் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்வோம்!

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்;அறிவுச்செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!

ஆனால்...தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள்.

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி இத்தகைய அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில்-அந்த மொழிக்குச் சொந்தக்காரர் என்று நினைக்கும்போது, அந்த மொழி மீது பற்று-பாசம் ஏற்படாமலா இருக்கும்?

அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது-எந்த நோக்குடனாவது-எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால், அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டு தானிருக்கிறது. பக்குவமாகக் கடக்க வேண்டுமானால், நல்ல நாவாயின்-கப்பலின் மூலம் கடக்கலாம்.


அதுபோல, தமிழர்களை அணைத்துக் கொண்டு சென்றால், அவர்களை விடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றினாலும்-அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க-உள்ளே பேசிவிட்டு வெளியே வந்தாலும் எந்த நாட்டின் மீது யார் படையெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்! தீதும் நன்றும் பிறர்தர வாரா

ஆனால், உண்மையான ஒற்றுமை உணர்வினை 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொன் மொழியில் வடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழரின் பெருந்தன்மையை எண்ணி—எண்ணி நெஞ்சமும் விம்முகிறது.

'யாதும் ஊரே-யாவரும் கேளிர்' என்று பாடிய புலவர் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா'-என்றும் அடுத்த அடியில் பாடியிருக்கிறார்.

நல்லது வரவேண்டுமா? அது நாம் தான் செய்து கொள்ள வேண்டும். கெட்டது வரவேண்டுமா? நாம்தான் வரவழைத்துக் கொள்ள வேண்டும்! எனவே, தீது வருமோ என்று ஐயப்பாடு கொள்ள வேண்டாம்! தமிழருக்குத் தீது பிறர்தருவதால் அல்ல-நாமே தீது தேடிக்கொண்டாலொழிய, தமிழர்களுக்குத் தீது ஒரு போதும் வராது.





# இன்பத் தமிழ்

—பாவேந்தர் பாரதிதாசன்—

தமிழுக்கு அமுதென்று பேர்! — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர் — இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! — இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

**தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! — இன்பத்**
**தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!**
**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! — இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!**
**தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! — இன்பத்**
**தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!**
**தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! — இன்பத்**
**தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!**

தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி, இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல, எங்களுக்கும் அதுதான் மொழி, அதுதான் இணைப்பு மொழி, அதுதான் பொது மொழி, அதுதான் ஆட்சி மொழி என்று கூறும் காலம் வரும்!

அந்தக் காலம் அவசர நடையால் வருவதல்ல! அவசரக்கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன், முள் அருகில் மீன் வரும்வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ள வேண்டும். தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும் காலம்—இடம்—வகை—பொருள் அறிந்து செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ்மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக்கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம்!

*—1968 ஜனவரியில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய தலைமையுரை.*

# முதல்வர் எம்.ஜி.ஆர்

தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 1963-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் 'கல்கி' சிறப்பு மலருக்கு வழங்கிய 'மொழிப் பிரச்னை' பற்றிய கட்டுரையின் சில பகுதிகளை இங்கே வெளியிட்டுள்ளோம். அன்று முதல் இன்று வரை மொழிப் பிரச்னையில் ஒரே நிலையினைத்தான் இன்றைய தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மேற்கொண்டு வந்திருக்கிறார் என்பதையும், இந்தித் திணிப்பு எதிர்ப்பில் எதிர்க் கட்சியில் இருந்தபோது எவ்வளவு தெளிவாகவும், தீவிரமாகவும் செயல்பட்டாரோ, அதே தீவிரத்துடன் தான் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் இன்றைய நிலையிலும் இருக்கிறார் என்பதையும் இந்தக் கட்டுரையில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தெளிவாக உணர்த்துவதைத் தெரிந்து கொள்ளலாம். இந்தித் திணிப்புப் பிரச்னை என்பது இக்கட்டுரை வெளிவந்து பதினைந்து ஆண்டுகளாகியும் இன்றும் அதே நிலையில்தான் இருக்கிறது என்பதையும், இந்தக் கட்டுரையின் கருத்துக்கள் தெளிவாக்குகின்றன.

# ஆட்சிக்கு — ஆட்சி செய்யும் — மொழியா?

ஆட்சிமொழி-இது ஒரு விசித்திரமான வார்த்தையாகி விட்டது; இன்று ஆட்சி செய்வதற்கு மொழியா, ஆட்சி செய்யும் மொழியா? இதற்கு விடை கண்டுபிடித்தால், தெளிவும் ஏற்படும், தேசிய நலனும் காப்பாற்றப்படும்.

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருப்போர், அந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தந்த மக்களின் பிரதிநிதிகளாக இயங்கும்பொழுது, அந்த மக்களின் தாய் மொழி அந்த நாட்டின் தேசிய மொழி என்ற முறையில் அதுவே அந்த நாட்டு மக்களின் ஆட்சிமொழியாக இடம் பெறுவது இயல்பு.

ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தில் பதினான்கு மொழிகள் - அவற்றைப்பேசுகிற தேசிய இனங்கள்-அந்த இன மக்கள் ஒன்றுபட்ட உணர்வுடன் இணைந்திருக்க வேண்டிய கூட்டாட்சி-அந்தந்த இன மக்களுக்கு-அவர்களின் தேசிய மொழிகளுக்கு, கலாசாரங்களுக்கு, நாகரிகம், பண்பாட்டுணர்ச்சிகளுக்கு சம உணர்வுடன் ஏற்றத் தாழ்வற்ற நிலையில்

அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்ப தற்கான உத்தரவாதமளிக்கும் அரசியல் சட்டம், அந்தச் சட்டத்தின்படி ஆட்சி செய்யும் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அரசாங்கம்... இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயங்கும் ஒரு துணைக் கண்டத்தில் ஆட்சிசெய்வதற்கு ஒரு மொழி தேவை என்ற நிலை ஏற்படும்போது, ''என்ன செய்ய வேண்டும்? என்ன செய்திருக்கிறார்கள் வேறுநாடுகள் இதுபோன்ற நிலைமைகளில்'' என்பதையெல்லாம் நியாய உணர்வுடன் சிந்தித்தால் யாராக இருந்தாலும், இந்திய மத்திய ஆட்சியாளர், ஆட்சி மொழி விஷயமாக மேற்கொண்டுள்ள செயல்களைக் கண்டிக்கவும், எந்த விலை கொடுத்தேனும் மாற்றித் தீர வேண்டும் என்ற முடிவுக்கு வரவும்தான் இயலும்.

## எது நியாயம்?

ஒரு சுயேச்சையான ஆதிபத்திய உரிமை பெற்ற நாடு, தன்னுடைய நாட்டின் தேசிய மொழியை ஆட்சிமொழியாக வைத்துக் கொள்வதுதான், தேசிய கௌரவம் பாதுகாக்கப்படுவதற்கான செயலாகும் என்பதை ஒப்புக் கொண்டால், பதினான்கு தேசிய மொழிகள் உள்ள நாட்டில், பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழியாவதுதானே நியாயம்? இல்லை, இல்லை-பதினான்கு மொழிகளையும் ஆட்சிமொழியாக்குவது இயலாது, கஷ்டம், சிக்கல்கள் வளரும்-அதனால் ஒரே மொழிதான் ஆட்சி மொழி, அதுவும் இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்குப் பகுதியில், குறிப்பிட்ட இடத்தில் வழங்கும் இந்தி மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறுவது என்ன நியாயம்?

இந்தி-இந்தியாவின் பதினான்கு தேசிய மொழிகளில் ஒன்று. அந்த ஒன்று மட்டும் தான் ஆட்சி மொழியாகும்-அதிகார மொழியாகும்-அதன் மூலம் இந்தி பேசாத மக்களை ஆட்டிப் படைக்கின்ற மொழியாகும் என்றால், அதுதான் தேசிய கௌரவம் காப்பாற்ற வழி என்றால், மற்ற பதின்மூன்று மொழிகளுக்குச் சொந்தக்காரர்களின் தேசிய கௌரவம் காப்பாற்றப்பட வேண்டாமா? இந்தி பேசுவோருக்கு மட்டும்தான் தேசிய கௌரவம் உண்டா? மற்ற வங்காளிகளுக்கு, மராட்டியர்களுக்கு, பஞ்சாபிகளுக்கு, தமிழர்களுக்கு, ஆந்திரர்களுக்கு, மலையாளிகளுக்கு, கன்னடக்காரர்களுக்கு மற்றும் பல இனத்தவர்களுக்கு இல்லையா?

**இதனால்தான் நாம் தெளிவாகக் கூறுகிறோம், பதினான்கு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள் என்று.**

—பலரின் நன்மையைக் கருதி ஒன்று செய்துதான் தீர வேண்டும் என்றால், கஷ்டம் என்றோ செலவாகும் என்றோ சொல்வது, ஒரு தனிமனிதன் சொல்லலாமே தவிர, ஓர் ஆட்சியை நடத்துவோர் சொல்லலாமா?

இன்று இந்தியைப் பரப்புவதற்காக, அதிகாரத்தைக் கொண்டும், பெரும் பொருட்செலவு செய்தும், மத்திய ஆட்சியினர் எவ்வளவு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்?

இந்தியாவின் தேசிய கௌரவம் என்ற பெயரில், இந்தி பேசுவோரின் தேசிய கௌரவம் காப்பாற்றப்படும்போது, மற்ற மொழி பேசுவோரின் தேசிய கௌரவம் காப்பாற்றப்பட அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள பேதமற்ற சமநிலை ஏற்பட ஆட்சியிலிருப்போர் செயல்படுவதுதானே முறை?

**பதினான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக்க நாளாகும் என்று காரணம் கூறுவார்களேயானால், அதுவரை எல்லோருக்கும் பொதுவான நிலையே நீடிக்கலாமே-அதுதானே நியாயம்?**

## அரியணை ஏற்றலாமா?

ஆங்கிலத்தை அகற்றி, இந்தியை அரியணை ஏற்றுவதில் இவ்வளவு அவசரமும், ஆத்திரமும் எதற்கு? ஆங்கிலம் அன்னிய மொழிதான்-சந்தேகமில்லை-ஆனால் கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக, அன்னியர் ஆட்சியிலும், இத்தனை ஆண்டுகளாகச் சுதந்தர ஆட்சியிலும் உபயோகத்தில் இருந்து வரும் ஒரு மொழியை, அவசரம் அவசரமாக அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, நாட்டின் ஒற்றுமை உணர்ச்சிகளை ஒருமுகப்படுத்த வேண்டிய மிக அவசியமான காரியத்தில் ஈடுபட வேண்டிய ஓர் ஆட்சி, ஆட்சி மொழி விஷயத்தில் ஏன் இவ்வளவு பிடிவாதமும், பரபரப்பும் காட்ட வேண்டும்? இத்தனை ஆண்டுகளாக, சுதந்தர ஆட்சியில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்து வருவதால் நாட்டின் கௌரவம், எப்போது, எங்கே யாரால் பறிக்கப்பட்டது? அல்லது களங்கப்படுத்தப்பட்டது?

1965-க்குப் பிறகு இந்திதான் ஆட்சி மொழி என்று சட்டம் செய்துவிட்டோம் என்றால், செய்துவிட்ட சட்டம் திருத்தப்பட முடியாததா? ஜீவாதார உரிமைகளைக் குறைக்கப் பதின்மூன்று ஆண்டுகளில் பதினாறு திருத்தங்கள் கொண்டுவந்து நிறைவேற்ற வில்லையா? ஒரு நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் தேசியப் பிரச்னையான மொழிப் பிரச்னையில், செய்த சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவர மறுப்பவர்களின் எண்ணத்தை அதனால் பாதிக்கப்படும் கோடிக்கணக்கானோர் சந்தேகப்படாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வகையில் நியாயமானது?

## உயிர்ப் பிரச்னை :

மொழிப் பிரச்னை என்பது சாதாரணப் பிரச்னை அல்லவே! அரசியல்-பொருளாதாரம்-சமூகம் - கல்வி—கௌரவம்—பண்பாடு-என்று அத்தனையிலும் இழையோடுகிற உயிர்ப் பிரச்னையல்லவா? இதற்காகச் சட்டத்தைத் திருத்துவது என்பது ஒன்றும் பாதகமான காரியம் அல்லவே!

---

இந்திக்குத் தமிழென்ன· தாழ்வு-இதை
எதிர்க்காத தமிழர்க்கு இனியென்ன வாழ்வு?

தமிழர்க்குத் தமிழொன்றே மீதி-அதுவும்
தாழ்வுற்று அழியவோ இதுவென்ன நீதி.

—கி.ஆ.பெ. விசுவநாதம்.

வளர்ந்து வரும் நாட்டுப் பற்று, பாரம்பரிய எல்லைகளையோ புதிய பூகோள அமைப்புகளையோ பொறுத்த தல்ல-முற்றிலும் தாய்மொழியையே பின்னியதாகும்.

—உலக வரலாற்று வல்லுநர் டாயின்பி

அன்னிய மொழி என்பதற்கு இலக்கணம் என்ன? தனது தாய்மொழி அல்லாத வேற்று மொழி அன்னிய மொழி என்றால், இந்தி தாய்மொழி அல்லாத இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலத்தைப் போல் இந்தியும் அன்னிய மொழிதானே? என்று பேராசிரியர்களும் பேரறிஞர்களும் கேட்பதில் தவறென்ன? ஆங்கிலம் அன்னியமொழி என்ற காரணத்தைக் காட்டி, பதினான்கு தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகள் ஆக்காமல், 'ஆக்க முயற்சி செய்வோம், என்றுகூடக் கூறாமல், இந்திதான் ஆட்சிமொழி என்று கூறினால், இந்திக்காரர்களுக்கு மட்டும் தேசிய கௌரவம் காப்பாற்றப்பட்டு, அவர்கள் இந்தியாவின் முதல்தரப் பிரஜைகளாக ஆகமாட்டார்களா?

ஆங்கிலம் ஆட்சிமொழியாக, ஆதிக்க மொழியாக இருந்த சமயத்தில் ஆங்கிலேயர் நிலை என்ன? இந்நாட்டை அடிமைப்படுத்துவதற்காக ஆங்கில மொழியை ஆதிக்க மொழியாக்கினார்கள் ஆங்கிலேயர்கள். ஆங்கிலம் ஆதிக்க மொழியானால் தான், ஆட்சிப் பொறுப்பில் ஆங்கிலேயர்களை அமர்த்த முடியும்; ஆங்கிலத்துக்கு உயர்வு ஏற்பட்டால் தான் ஆங்கிலேயர்களுக்கு உயர்வும், மரியாதையும், மதிப்பும் ஏற்படும் என்று கருதி, தனது தாய்மொழியை, பல்வேறு மொழி பேசும் மாறுபட்ட தேசிய இனங்களைக் கொண்ட துணைக் கண்டத்தில் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகவும் ஆக்கினார்கள். அந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்தால்தான் அந்தஸ்து, அதிகாரம், ஆதிக்கம் என்ற நிலை பிறந்தது. ஆங்கிலேயர்களைக் கண்டாலே ஏன், ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டாலே நம்மை விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் பாமர மக்களிடையே தோன்றியது.

அப்படிப்பட்ட ஒரு நிலையை இந்தி மொழிக்கும், இந்தி பேசுவோருக்கும் இன்று ஏற்படுத்தும் ஒரு காரியம்தான் இந்தியை ஆட்சிமொழியாக்கும் செயல் என்பதை யாராலும் மறுக்க இயலுமா?

### இந்திப் படித்தால் இந்திக்காரரா?

இந்தியை எல்லா மக்களும் படித்து விட்டால் அந்தப் பேதம் நீங்கிவிடும் என்று கூறுகிறார்கள். முடியுமா? ஆங்கிலத் திணிப்பு முயற்சி இருநூறு வருடங்களாக நடந்தும் எத்தனை பேர் ஆங்கில அறிவு பெற்றிருக்கிறார்கள்? மேலும் ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் அன்றைய நிலையில் ஆங்கிலேயர்கள் ஆகிவிட முடிந்ததா? ஆங்கிலம் படித்தவர்கள் என்றாக முடிந்ததே தவிர ஆங்கிலேயர் ஆக முடியவில்லை என்பதைப் போல் இந்தி படிப்பவர் இந்தி படித்தவர் என்றாவாரே தவிர, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட இந்திக்காரராக முடியாதே!

இந்நிலையில்தான் இந்தி ஆட்சி மொழியாவதானால் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்கிறோம் என்று மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் கூறுகிறார்கள்.

இந்திதான் ஆட்சி மொழி, இந்தியில் தான் ஆட்சி அலுவல்கள் நடைபெற வேண்டும். இந்தி படித்தால்தான் வேலை, இந்திதான் இந்தியாவின் கௌரவத்தைக் காட்டும் மொழி என்று சட்டம் செய்து வைத்துக் கொண்டு, மற்றவர்கட்கு, இந்தி பேசாத மக்களுக்கு "நாங்கள் ஆபத்பாந்தவர்களாக, அனாதை ரட்சகர்களாக, கருணாமூர்த்திகளாக இருப்போம்; கவலைப்படாதீர்கள்" என்று மேடைகளிலும் பத்திரிகைகளிலும் அபயம் அளிப்பதால் மட்டும் துணைக் கண்டத்தின் பெரும் பகுதி மக்களின் நலன்கள் என்றென்றும் பாதுகாக்கப்படும் என்று இந்தி பேசாத மக்கள் நம்பிக்கையோடிருப்பார்கள் என்று இந்திபேசுவோர் எதிர்பார்த்தால் ஒன்று அவர்கள் அறியாமைக்காரர்களாக இருக்க வேண்டும் அல்லது மற்றவர்கள் ஏமாறுவார்கள் என்று கருதுபவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

முறைப்படி நிறைவேற்றப்படும் சட்டங்கள், நிறைவேற்றியவர்கள் கண்முன்பாகவே செல்லாதவைகளாகிவிடும் நிலைமைகள் ஏற்படும் இந்தக் காலத்தில், உறுதி மொழிகள்-நம்பிக்கை உரைகள்—ஒரு பெரிய சமுதாயத்தைக் காப்பாற்றும் என்று எந்த ஏமாளியும் நம்பமாட்டான்.

தாய்மொழி-ஆங்கிலம்-இதர இந்திய மொழிகளில் ஒன்று- என்று மூன்று மொழித் திட்டத்தைக் கல்வித்துறையில் அமல்படுத்துவதன் மூலம் எல்லோருக்கும் சமநிலை அளிப்பதாக ஆட்சியினர் கூறுகிறார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், நியாயமான ஏற்பாடு போலத் தோன்றும் இத்திட்டம் பச்சிலையால் மூடப்பட்ட பெரிய படுகுழி என்பது கூர்ந்து கவனித்தால் விளங்கும்.

தாய்மொழி-இதர இந்திய மொழிகளில் ஒன்று, ஆங்கிலம் ஆக மூன்று மொழி என்றும் கூறினாலும், தாய்மொழி-இந்தி-ஆங்கிலம் என்றுதான் ஏற்பாடுகள் உள்ளன. இந்த நிலையில் இந்தி பேசுகிறவர்கள் தமது தாய்மொழியான இந்தியை மட்டும் கற்றாலே போதும். அத்தனை வசதிகளையும் பெற்று விடுவார்கள். மற்ற மொழிக்காரர்கள் தமது தாய்மொழியுடன் ஆங்கிலம் கற்றாலும் இந்தியைக் கற்றால்தான் சட்டபூர்வமாக உரிமைகளைப் பெற முடியும் என்ற நிலை ஏற்படும்பொழுது, இந்திய அரசியல் சட்டம் கூறுகிற சம நிலை—சம வாய்ப்பு—எப்படி ஏற்படும்?

ஆட்சியாளர் கூறும் மூன்று மொழித் திட்டத்தை முறியடிக்கும் குரல் ஒன்று இதோ கேளுங்கள்; "இந்தி பேசும் மாநிலங்களில், ஆங்கிலம் கற்க வற்புறுத்தக்கூடாது!" என்று பீகார் சட்டமன்றத் தலைவர் மத்திய சர்க்காருக்கும், இந்தி மாநிலங்களின் ஆட்சியாளர்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இந்தி மொழிக்காரர்கள் ஆங்கிலத்தைப் பயில்வதே கூடாது என்ற உணர்வு கொள்கிறார்கள் என்றால் அவர்களுடைய இந்தி மொழி பெறப்போகும் ஆதிக்கத்தை எண்ணி எவ்வளவு வெறியடைந்திருக்கிறார்கள்? அதற்கு எவ்வளவு அவசரப்படுகிறார்கள் என்பது தெளிவாகப் புலனாகிறதல்லவா?

பதினான்கு தேசிய மொழிகளைக் கொண்ட துணைக் கண்டத்தில் ஒரு மொழி தான் ஆட்சி மொழியாகும்—ஆட்சி மொழியாக ஆக்குவோம்—என்று பிடிவாதத்தோடு கூறுகிறார்கள்.

சட்டமன்றம் தன் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தினால் சட்டமும் செய்துவிட்டார்கள். ஆனால், இந்தி பேசாத மக்களுக்கு புதிய சட்டத்தைக் காட்டி, ''ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்கலாம் என்று சட்டத்தில் சேர்த்திருக்கிறோம்—அதுவே இந்தி பேசாத பகுதி மக்களுக்கு நாங்கள் அளித்துள்ள வரப்பிரசாதம்'' என்று பேசும் மத்திய ஆட்சியினர், பீகார் சட்ட மன்றத் தலைவரின் ''அபாய அறிவிப்பு''க்கு என்ன விளக்கம் கூறுவார்கள்? 1965-க்கு முன்பே ஆங்கிலம் படிப்பதுகூடக் கூடாது என்று குரல் எழுப்புவோர் சட்டபூர்வமான அந்தஸ்து இந்திக்குக்கிடைத்தவுடன் என்ன பாடுபடுத்துவார்கள் என்பது புரிகிறதல்லவா?

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட பகுதியினர் இப்படி வெறி கொள்ளும் செயல் ஒருபுறம் நடக்க, இன்னொருபுறம் அதிவேகமாக அதிகாரபலத்தைக் கொண்டு மத்திய ஆட்சியினர் ஒவ்வொரு துறையிலும் இந்தியைத் திணிக்கும் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தி பேசாத மக்களின் நலன் கருதியே ஆங்கிலமும் ஆட்சிக்கு உபயோகப் படுத்தப்படலாம் என்று சட்டத்தில் சேர்த்திருக்கிறோம் என்று வெளியில் பிரச்சாரம் செய்வதும், மறைமுகமாக எல்லா இலாகாக்களிலும் இந்தி கற்றேயாக வேண்டும் என்று வற்புறுத்துவதுமாக மத்திய ஆட்சியில் இருப்பவர்கள் செயல்படுகிறார்கள். ஒரு பெரிய பூபாகத்தை ஆளுகிற சர்க்கார், அந்த நாட்டு மக்களின் ஜீவாதார பிரச்னையில் இப்படி முரண்பாடாகச் செயல்படுவது நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல.

சமீபத்தில் தில்லி சர்க்காரில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒரு தென்னாட்டுக்காரரிடம் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ''இந்தி ஆட்சி மொழியானால் நாங்களெல்லாம் தில்லியை விட்டு வெளியேற வேண்டியது தான்'' என்று மனக் கொதிப்போடு, வேதனை ததும்பக் கூறினார். ஓர் உயர் அந்தஸ்தில் உள்ள பெரிய அதிகாரியின் நிலை இதுவென்றால் இலட்சக் கணக்கில் மத்திய ஆட்சியில் தொடர்புடைய இந்தி பேசாத பகுதி உத்தியோகஸ்தர்கள் நிலை என்ன ஆகும் என்பதை நினைத்தாலே உள்ளம் நடுங்குகிறது.

ஆனால் இதற்கு என்ன வழி? சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று அடங்கி விட முடியுமா? சட்டத்தை மாற்றியமைக்க வழிவகை காண வேண்டாமா? பத்திரிகைகளில் விவாத அரங்குகள் நடத்துவதால் மட்டும் பலன் ஏற்பட்டுவிடுமா? நம்முடைய நாட்டில் மொத்தம் படித்த மக்கள் தொகை கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தவன்—எழுத்துக் கூட்டி இரண்டு வார்த்தைகள் படிக்கத் தெரிந்தவன் உட்பட—இருபத்தைந்து சதவிகிதத்துக்குச் சற்றுக் கூடுதல் என்ற நிலையில்—பத்திரிகை படிப்போர் தொகை எவ்வளவு? மற்ற எழுபத்தைந்து சதவிகித மக்களுக்கு உண்மை உணர்த்தப்பட வேண்டாமா? துர்ப்பாக்கியவசமாக நமது நாட்டில் எந்த மக்கள் படித்துணர்ந்து நன்மை தீமைகளை அறிந்து நல்ல பொது அறிவு பெற்றவர்களாக விளங்குகிறார்களோ அந்த மக்கள் ஏனோ தானோவென்று, 'நடப்பது நடக்கட்டும், நம்மால் என்ன செய்ய முடியும்?' என்று தன்னம்பிக்கையற்ற நிலையில் வாழ்கிறார்கள். நான் முன்பு கூறிய அதிகாரியைப் போல் இலட்சக்கணக்கானோர் இந்தியால் வரும் தீமையைத் தாங்களே நேரில் அனுபவித்தும் கூட வாய் திறவாமௌனிகளாக இருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். பிரச்னைகள் இந்தத் தலைமுறையோடு முடிகிற காரியங்கள் அல்லவே! வருகிற தலைமுறையின் வாழ்வு யாரிடம் ஒப்படைக்கப் படும்? இந்தி பேசுவோரிடம்தானே? அதற்கு ஒரு தடை ஏற்படுத்த, படித்தவர்கள் உத்தியோகம் பார்ப்பவர்கள், தமது குடும்ப நலனை, எதிர்கால சந்ததிகளின் நலனைக் கருதியாவது, அரசியல் சட்டம் அளித்துள்ள உரிமைகளுக்குட்பட்டாவது ஜனநாயக ரீதியில், சட்டபூர்வமாக கண்டிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாமா?

—(கல்கி மலர்-23: இதழ்-13:—1953 ஆகஸ்டு திங்களில். 'ஆட்சிமொழிக் கருத்தரங்கு' என்ற கட்டுரைத் தொடரில் வெளியான கட்டுரையின் சில பகுதிகள்.)

இந்தியை ஏற்றுக் கொள்ளவிரும்பாத மக்கள்மீது இந்தி கட்டாயமாகத் திணிக்க முயற்சிக்கப்படுமானால், உள்நாட்டில் மிகப்பெரிய குழப்பம் வெடிப்பதற்குரிய சாத்தியக் கூறுகளை இந்தி வெறியர்கள் உருவாக்குகிறார்கள் என்பதை ஒதுக்கித் தள்ளி விடுவதற்கில்லை. இதன் விளைவாக நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் அழிவு ஏற்படும் என்று நான் உணர்கிறேன்.

கரியப்பா.

# இந்தித் திணிப்பு- நீதியாகுமா?

**மூதறிஞர் இராஜாஜி**

எல்லா மக்களும் சம வாய்ப்புகள் பெற்றிருக்க வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது என்பதுதான் நம்மை ஆள்கிற ஆட்சியின் சோசலிச தாரக மந்திரம்! ஆனால் ஆட்சி மொழி விஷயத்தில் மட்டும் இதற்கு முழுவதும் நேர்மாறாக, இதுவரையில் இல்லாத ஏற்றத் தாழ்வுகளைப் புதிதாக உண்டாக்கியிருக்கிறார்கள். இந்தியை ஆட்சி மொழியாக்குவதால் தென் நாட்டில் உள்ள கோடிக் கணக்கான மக்களை ஒரே வீச்சில் இந்தி மொழிக்காரர்களுக்குச் சமமான வாய்ப்பில்லாமல் செய்திருக்கிறார்கள்.

'இந்தி நமது மக்களின் மொழி; சர்க்கார் மொழியும் மக்களின் மொழியும் ஒன்றாக இருக்க வேண்டும்' என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், இந்தி எந்த மக்களின் மொழி? நாடு முழுவதும் உள்ள மக்களின் மொழியா அது? இல்லை. அது தென் இந்தியாவில் உள்ள படித்தவர்-படிக்காதவர் யாருமே அந்த மொழியைப் பேசவில்லை; புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். வட இந்தியாவில் அடுத்தடுத்து உள்ள நாலு ராஜ்யங்களின் மொழிதான் அது. சதவீதக் கணக்குகள் எப்படியானாலும் இந்தி பேசுவோர் நாடு முழுவதும் பரவியிருக்கவில்லை. ஒரே பிரதேசத்தில்தான் குவிந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாஷை'யை ஆட்சி மொழியாக்குவதால் நாட்டின் ஒரு பகுதியில் உள்ள மக்கள் மற்றப் பகுதிகளிலுள்ளவர்களை விடப் பெருத்த அனுகூல நிலையை அடைவார்கள். ஆங்கிலம் அறிந்தவர்களைவிட இந்தி அறிந்தவர்கள் அதிகமாக இருக்கலாம். ஆனால், ஆங்கிலம் நாடு முழுதும் சமமாகப் பரவியிருக்கிறது. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதால் எந்தப் பகுதி மக்களும் மற்றவர்களை விட, அனுகூல நிலையிலோ, பிரதிகூல நிலையிலோ இல்லை. இப்போது அரசாங்க விவகாரங்களில் எல்லாரும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் சம வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இந்தித் திணிப்பின் மூலம் இந்தச் சமத்துவத்தை நாசமாக்கப் பார்க்கிறார்கள்.

'முன்பு ஆங்கிலத்தை நிர்ப்பந்தத்தின் மேல் படிக்கவில்லையா? அதேபோல் இப்போது இந்தியைப் படிப்பதில் சிரமம் என்ன?' என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆங்கில ஆட்சியாளரின் நிர்ப்பந்த முறை பற்றி இப்போது பேசுவதில் பொருள் இல்லை. அவர்களுடைய ஆட்சி முடிந்துபோய் அவர்கள் இந் நாட்டை விட்டுப் போயாகி விட்டது. ஆங்கில பாஷை மட்டும் இங்கு தங்கியிருக்கிறது. இன்று ஆங்கிலத்தை அதன் பயனைக் கருதித்தான் படிக்கிறோமே அன்றிப் பலாத்காரத்துக்கு அடங்கிப் படிக்கவில்லை.

இந்தி விஷயம் வேறு. இந்தி மொழி பேசுகிறவர்களும், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களும் ஒரு மெஜாரிட்டியாகச் சேர்ந்து கொண்டு தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை வைத்துப் பலாத்காரத்தினால் அந்த மொழியை நம்மேல் திணிக்கிறார்கள். ஆங்கிலேய ஆட்சியின் போது ஆட்சியாளர்கள் மேலும், அவரவர்களுடைய மொழியின் மேலும் ஏற்பட்ட வெறுப்பு உணர்ச்சிதான் இப்போது மீண்டும் நம்முடைய நிகழ்கால இந்தி ஆட்சியாளர் மேலும் ஏற்படும்.

நம் நாட்டின் மெஜாரிட்டியினர்மீது துவேஷத்தை உண்டாக்குவதற்கு இந்தி மொழித் திணிப்பைப் போல வேறெதுவும் கிடையாது. இன்று எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஆட்சி மொழியை ஒரு சாராருக்கு விசேஷச் சலுகை தருகிற முறையில் மாற்றி, செயற்கையாக ஓர் ஏற்றத் தாழ்வை உண்டாக்குவது பாதிக்கப்பட்டவர்களுக்குஎல்லையில்லாத இதய தாபத்தை உண்டாக்கி அவர்களைத் தீவிரமாகத் துன்புறுத்தும். தங்களைக் கீழ்த்தரக் குடிமக்களாக்குகிற ஆட்சிமொழிப் பட்சாபாதச் சட்டம் மக்களைக் கொதிப்படையச் செய்யும். துவேஷம் தலைதூக்கும். தேச ஐக்கியத்துக்கு ஆபத்து ஏற்படும். இதற்கு இடமளிப்பது நீதியா? புத்திசாலித்தனமா?

(1963ல் எழுதியது)





**மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்**
**திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன்**

அன்புசால் பெரியோரே!
ஆன்றவிந்த சான்றோரே!
அறிவுசால் ஆசிரியப் பெருமக்களே!
இன்று பட்டம் பெற வந்துள்ள மாணவ மணிகளே!

நம்பிக்கையோடு எனக்குத் தந்துள்ள பொறுப்பையும் எண்ணிப் பார்த்துக் கொண்டு, அமைச்சர் என்ற பொறுப்பில் பேச்சைத் தொடர்கிறேன்.

இன்றைய நாள், கல்லூரி வாழ்விலேயே ஒரு மகத்தான திருநாள்! கணக்கில்லா வெற்றி

# வருங்காலம் வளமாகட்டும்

அனைவருக்கும் வணக்கம். பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவினை ஆற்ற என்னை அழைத்த கல்லூரி நிர்வாகிகளுக்கு முதலில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூத்த குவளைப் பூக்களோ? பொதிகைக் குறிஞ்சி மலர்களோ என்கிறாற்போல அகமும் முகமும் மலர அமர்ந்துள்ள மங்கையராம் உங்கள் நடுவில் வந்து நின்று, பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு ஆற்றுவதை எனக்குத் தரப்பட்ட அருமைமிகு பெருமையாகவே கருதுகின்றேன். அகமகிழ்ந்து கூறுகின்றேன்.

என் மனமெல்லாம் மகிழ்ச்சிக் கடல்!
இதயமெல்லாம் இன்பக் கடல்!
உள்ளமெல்லாம் உவகைக் கடல்!

அருமை மாணவிகளே! மலர்ந்த முகங்களைப் பார்க்கின்றபோது, எனக்கு நான் பட்டம் பெற்ற நாளும் கூடவே நினைவிற்கு வருகிறது! ஒரு கணம் மாணவியாக மாறிப் போகிறேன்.

அறிவென்னும் அமுதத்தை அள்ளியிட்ட ஆசிரியப் பெருமக்களே! உங்களிடம் பயின்ற மாணவியர் பெற்ற பெருவெற்றி கண்டு அதிலும் இன்றைய புதுக்கோலத்தைக் கண்டு அகமகிழ்ந்து நிற்கும் உங்களைப் பார்க்கின்ற போது, நான் ஒரு கணம் ஆசிரியையாக மாறிப் போகிறேன்! பழைய நினைவுகளில் நீந்தித் திளைக்கிறது எனது உள்ளம்! அரும்பாடுபட்டு என் மன எழுச்சியை, நெகிழ்ச்சியை அடக்கிப் பிடித்து எங்கள் புரட்சித் தலைவர் பெரும்

களை இனி அடுக்கடுக்காய்க் குவித்தாலும் இன்றைய நாள் இனிமை தன்னை இதயம் என்றுமே மறக்காது.

மாணவிகள் மனங்களிலே மகிழ்ச்சி;
ஆசிரியர்கள் மனங்களிலே மகிழ்ச்சி;
மாணவிகளின் பெற்றோர் மனங்களிலும் மகிழ்ச்சி;
இவற்றையெல்லாம் பார்த்துக் கல்லூரி நிர்வாகத் துறையினரின் மகிழ்ச்சி!

'நம் ஊர்க் குழந்தைகள் பெற்ற வெற்றியாயிற்றே! என்று அகமகிழ்ந்து நிற்கும் ஈரோட்டுப் பெரியவர்களின் மன மகிழ்ச்சி!
ஆக எங்கும் மகிழ்ச்சி, எதிலும் மகிழ்ச்சி!
மகிழ்ச்சிக்கு மணமுண்டு, மகிழ்ச்சிக்கு இசையுண்டு;
அந்த மணத்தாலும், இசையாலும் இந்த அரங்கமே நிரம்பி நிற்கக் காண்கிறேன்!!

அருமை மாணவிகளே! தங்கள் குழந்தைகளை அரும்பாடுபட்டு படிக்க வைத்துவிட்டு, இந்தப் பட்டதாரிக் கோலத்திலே பார்க்க மாட்டோமா என்று ஆசைக் கனவுகளை வளர்த்துக் கொண்டிருக்கின்ற எத்தனையோ கோடானுகோடித் தாய்மார்கள் இந்த நாட்டிலே உண்டு! அதை நீங்களும் அறிவீர்கள்! அவர்கள் கண்ணோட்டத்திலே பார்க்கும் போது இன்றைய நாள் எத்தகு மகிழ்ச்சியான நாள்? ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் திருநாள் என்பதை அவர்கள் மனக் கதவைத் தட்டிப் பார்த்தால்தான் உங்களால் புரிந்து கொள்ள முடியும்!



இன்று-ஆசைக்கனவுகள் அறுவடை செய்யப்படுகின்றன. ஈடில்லா இலட்சியங்கள் எட்டிப் பிடிக்கப்படுகின்றன. உண்மைதான்! என்றாலும் அத்துடன் ஓய்ந்து விடாதீர்கள்! வெறும் பட்டப் படிப்பை முடித்தவர்கள் என்பதால் மட்டும் உங்களுக்கெல்லாம் இன்று பட்டம் தரப்படுகின்றது என்று நினைக்காதீர்கள்! நீங்கள் பக்குவம் பெற்றவர்கள் என்று இந்த நாடு கருதுகிறது; பகுத்தறிவுக் கண்ணோட்டம் வாய்ந்தவர்கள் என்றும் இந்த நாடு எதிர்பார்க்கின்றது!

அதனால்தான் இருட்டுலகில் கிடந்த குருட்டு மனங்களைத் திருத்திடவே பிறந்த நம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பெண் கல்வியின் இன்றியமையாமையை மிகவும் வற்புறுத்தினார்கள். பெண்கள் உரிமை பெறவேண்டும்; ஆண்களைப் போல் சமத்துவம் பெறவேண்டும் என்றெல்லாம் ஆசை கொண்டிருந்த பெரியார் அவர்கள் பெண்களைப் பார்த்துச் சொல்கிறார், 'நீங்களும் மேல் நாட்டுப் பெண்களைப் போல சகல உரிமைகளையும் பெற்று இன்ப வாழ்வு வாழவேண்டும்; அதற்கு நீங்கள் ஆண்களைப் போல் படிக்க வேண்டும்; உங்களுக்குச் சட்டத்தின் மூலம் பல உரிமைகள் வரக் காத்திருக்கின்றன; அவ்வுரிமைகளை அனுபவிக்க உங்களுக்குக் கல்வியறிவு அவசியமாகும்'' என்று வறுபுறுத்தி உரைக்கின்றார்.

தந்தை பெரியார் மட்டுமல்ல; உலகத் தலைவர்கள் எல்லாருமே பெண்கல்வி மீது தனிக் கவனம் செலுத்தித்தான் வந்தனர்; இனியும் செலுத்தி வருவர். காரணம் ஓர் ஆணுக்குத் தரப்படுகின்ற கல்வி அவனுக்கு மட்டுமே பயன்படும்-ஆனால் ஒரு பெண் பெறுகின்ற கல்வி அவளுக்கு மட்டுமல்லாது, அவள் குடும்பத்திற்கு மட்டுமல்லாது, அவள் சமுதாயத்தின் அத்தனை பேர் முன்னேற்றத்திற்குமே நன்மை பயக்கும் என்பது நிர்ணயிக்கப்பட்ட உண்மை! அப்படிப்பட்ட சிறந்த கல்வியை நீங்கள் அனைவரும் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் கல்வி பெற்றவர்கள் எல்லாருமே அறிவாளிகள் என்று கூறிவிடமுடியாது; கூறவும் கூடாது. நான் இப்படிச் சொல்வதற்காக யாரும் வருத்தப்படக்கூடாது. காரணம், நான் மட்டும் அப்படிச் சொல்லவில்லை நம்முடைய ஈரோட்டுப் பாசறையின் இணையில்லாத் தானைத் தலைவர் தந்தை பெரியார் அவர்களே அப்படிக் கூறுகிறார்.

''குருட்டு உருப் போட்டு பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றவர்களையும்கூடக் கல்வியாளர் அறிவாளிகள் என்று சொல்லிவிட முடியாது'' என்று திட்டவட்டமாகக் கூறுகின்ற நம் அய்யா ஓர் உதாரணத்தால் விளக்குகின்றார்.

''வான சாஸ்திரியாய் இருந்து சூரிய கிரகணத் தன்மையைப் பிரத்தியட்சப் பாடமாகச் சில சோதனைகளைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்து விட்டு வீட்டுக்குப் போனவுடன் இராகு, கேது என்கின்ற பாம்புகள் விழுங்குகின்றன என்பதற்குத் தகுந்தபடி தோஷப் பரிகாரத்திற்கு ஸ்நானம் செய்யவும், தர்ப்பணம் செய்யவும் சங்கல்பம் செய்து கொள்ளவும், சாந்தி செய்யவும் ஆன காரியத்தில் ஈடுபடுகிறான். ஆகவே, கல்வியுடன் மதத்தையும் கலப்பதால் மனிதனுடைய பகுத்தறிவும் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது?'' என்று மனம் வருந்திக் கூறுகிறார்.

அறிவுச் சுவை காய்த்துக் கனிந்துள்ள அன்பு மாணவ மணிகளே! இதுவரை நீங்கள் படித்த படிப்பு ஏட்டுப் படிப்பு-சொல்லப் போனால் 'தியரிடிகல்', பரந்துபட்ட நாடு உங்கள் சேவையையும் தொண்டையும் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறதே! அது இனி தரப்போகும் அனுபவம் இருக்கிறதே—அதுதான் உங்களுடைய பட்டறிவு வகுப்பு-அதாவது 'பிராக்டிகல்' வகுப்பு' !

திருமணமோ, மேற்படிப்போ, அலுவலகமோ மேற்கொண்டு நீங்கள் எதில் நுழைய விரும்புகிறீர்களோ அது உங்கள் சொந்தப் பிரச்சினைதான் என்றாலும், அறிவுரை, அறவுரை சொல்லுகின்ற நிலையில்தான் புது மணப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு அவள் ஆல்போல் தழைத்து, அருகு போல் வேர்விட்டு நீண்ட நெடுங்காலம் வாழவேண்டும் என்ற ஆவலால் சில பல அறிவுரைகளைச் சொல்ல முற்படுகின்ற தாயாரின் நிலையில் இருப்பதாக எண்ணுகிறேன். அதனால் ஒரு சில அறிவுரைகளை வாழ்க்கைக்கு வழிகாட்ட விளக்கிட எண்ணுகிறேன்.

அமைதி, அன்பு, பாசம், பரிவு, கனிவு, கருணை, விருந்தோம்பல் இவற்றை ஏட்டில் மட்டும் அறிந்திருப்பீர்கள்! உங்கள் தாய்மார்கள், ஆசிரியைகள் இவர்களிடம் கண்டிருப்பீர்கள். இனி, மணமகளாக, மற்றோர் வீட்டுத் திருமகளாகப் போகப் போகிறோம் என்பவர்கள் இந்தக் கொள்கைகளையெல்லாம் உங்கள் புகுந்த வீட்டில் பொருத்திப் பாருங்கள்! ''ஒருவர் பொறை இருவர் நட்பு'' என்பதை என்றும் மறக்காமல்.

''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று''

என்ற குறளை மனத்தில் கொண்டு, குதூகலமாய் வாழ வாழ்த்துகிறேன். இல்லறத்தில் வரும் சிறுசிறு பிரச்சினைகளை இணக்கமான அன்பினால்தான் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, ''இடைவிடாத பேச்சு வார்த்தையே தேவை; அதற்கும் ஊரார் நால்வர்; உற்றார் நால்வர்; மற்றவர் நால்வர்'' என மாநாடே திரட்டி இல்லறத்தின் அடிப்படை ஆதார சுருதியைக் கெடுத்துக் கொண்டு விடக்கூடாது. ''படித்த பெண்; அதனால்தான் பாங்காகக் குடித்தனம் நடத்துகிறாள்'' என்று ஊரார் சொல்லவேண்டுமே தவிர, நீங்களே ''நான் படித்த பெண், நான் படித்த பெண்''— என்று வீண்பெருமை பேசித் திரியக்கூடாது. மொத்தத்தில் பாரதிதாசன் எழுதிவைத்த குடும்ப விளக்காக நீங்கள் ஒளிர வேண்டும்; வளர வேண்டும்.

இனி மேற்படிப்பு என்ற கல்வியுலகைக் காண விரும்புவோர்க்கு நான் கூறவிழையும் வார்த்தைகள் ''படியுங்கள்; படியுங்கள், மேலும் படியுங்கள்'' என்ற லெனின் கொள்கைக் குரலொலியையே! ''இல்லை, நாங்கள் பணிபுரியப் போகிறோம்'' என்பீர்களேயானால் அங்கும் உங்கள் அலுவலகத்திலும் எங்கள் தலைவர் பொன்மனச் செம்மலின் நேர்மை, தூய்மை, துணிவு இவற்றினைக் கருத்தினில் கொள்ளுங்கள்! கவலைகள் தொடராது!

ஆனால ஒனறு-எந்தத் துறையை நீங்கள் தேர்ந்தெடுத்தாலும் சரி, அதிலே எத்தகு சிக்கல் வந்தாலும் சரி, அதனைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் பார்த்துப் பழகுங்கள். பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடனே விடை காணவும் முயலுங்கள். மொத்தத்தில் நீங்கள் பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்களாக, இந்த பூமிக்கே கண்களாக விளங்க வேண்டும். என்று வாழ்த்துகிறேன்.

இந்தப்புரட்சி எண்ணங்களையெல்லாம், புதுமை எண்ணங்களையெல்லாம் கட்டாயமாக உங்கள் ஆசிரியப் பெருந்தகைகள் உங்களுக்கு ஊட்டியிருப்பார்கள். இந்த நேரத்திலே கவி இரவீந்திரநாத்தாகூரின் கூற்றினை நினைவூட்ட விரும்புகிறேன் ''ஆசிரியர்கள் அனைவருமே ஏற்றிவைத்த தீபங்கள்; அவை இன்னும் பல தீபங்களை ஏற்றி வைக்கும் ; ஏற்றம் பெற வைக்கும்'' என்கிறார் கவி இரவீந்திரநாத தாகூர். ஏற்றப்பட்ட தீபங்களால் ஒளி ஏற்றுள்ள நீங்கள் மறக்காமல் உங்கள் பின் வருவோர்க்கும் ஒளி தூண்டிவிட வேண்டும்!

இல்லறத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும் சரி, அலுவலகத் துறையைப் பிடித்தமானதாகக் கொண்டாலும் சரி, உயர் கல்வி பெற்றிட விரும்பினாலும் சரி எதிலும் நீங்கள் இந்த ஈரோட்டு மண்ணின் தனித்துவத்தை நிலை நிறுத்த வேண்டும். இந்த ஈரோட்டு மண்ணின் மகத்துவம் அற்ப சொற்பமானதல்ல! அறியாதார் யாரும் இருக்கவும் மாட்டார்கள்! அகில உலகமும் இன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற அளவுக்கு, சீர்மையும் சிறப்புமுடைய நம் தந்தை பெரியாரைத் தமிழக அரசியலுக்குத் தந்ததே இந்த ஈரோட்டுச் சீமைதான். அரசியல் வானத்தின் விடிவெள்ளியே இந்த ஈரோட்டு மண்ணில்தான் உருவெடுத்து வந்தது. காஞ்சியிலே அதன் ஒளி பரவிற்று! சொல்லப் போனால் இன்று தமிழகம் எங்கினும் ஈரோட்டின் பகுத்தறிவு ஒளிதான் பரவி நிற்கின்றது; புரட்சித் தலைவர் நாளும் நாளும் அதனைப் பரப்பி வருகின்றார் என்பதையும் சொல்ல வேண்டியுள்ளது.

அதனால், இந்தப் பட்டமளிப்பு விழாவிலே ''தந்தை பெரியார் மனம் விரும்பிய ஒன்றைச் செய்து முடிப்போம்'' என்ற உறுதி பூணுங்கள். ''பெண்டிர் சமுதாயம் பெரும் முன்னேற்றம் அடைய வேண்டும்'' என்பதே அவரின் ஆசை, அதுவே, உங்கள் கடமையாகவும் அனைவரின் இலட்சியமாகவும் இருக்க வேண்டும்! அந்த இலட்சியத்தை அடையப் பாடுபட வேண்டியது உங்களின் பெருங்கடமைதான்; பெருமை தரும் கடமைதான்! என்பதைக் கனவிலும் மறவாதீர்கள்!

இதுவரை என் பேச்சு உங்களுக்கு இனித்தது; இப்போது சொல்லப்போவது சிறு கசப்பைத் தருமோ என்று அஞ்சுகிறேன். என்றாலும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. பெண்களுக்கு முன்னேற்றத்தின் மீதுதான் ஆசை இருக்க வேண்டுமே தவிர, நகை மீதோ புடவை மீதோ, அளவுக்கு மீறிய ஆசை இருக்கவே கூடாது. இதுவும்கூட என் கருத்து மட்டுமல்ல; அய்யாவின் கருத்துமாகும். கூட்டத்திற்குக் கூட்டம், மேடைக்கு மேடை இக்கருத்தை அவர் வலியுறுத்தி வந்தார்; சிறுகச் சிறுகவாவது இவ்வழக்கத்தைப் பெண்டிர் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். புன்னகைதான் உங்களின் சொத்து. பொன்னகை அல்ல.!

இந்த நகையாசை, புடவை ஆசை. இவையெல்லாம் உயர்ந்த இலட்சியங்களைவிட்டு மனங்களைத் திசை திருப்பும் என்பதால்தான் இந்த எச்சரிக்கையைச் செய்கின்றார் தந்தை பெரியார் அவர்கள், நாளையப் பொழுது நல்லதாக விடிய வேண்டி, புத்துலகை, ஒரு பொன்னுலகை நிர்மாணிக்கும் பொறுப்பு உங்களுடையது என்பதைக் கனவிலும் மறவாதீர்!

''புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்'

என்ற புதுவைக்குயில் கூற்றுப்படி,

சாதிவேறுபாடு இல்லாத—
'புதியதோர் சமுதாயத்தை'
சங்கடங்கள் ஏதுமில்லா—
'புதியதோர் சமுதாயத்தை'
மூடப்பழக்கத்தின் முடை நாற்றம் வீசாத....
'புதியதோர் சமுதாயத்தை'

உண்டாக்க வேண்டும் நீங்கள் என்று வாழ்த்துகின்றேன்.

சமுதாயத்தின் சக்தி மிக்க அங்கமான நீங்கள் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, ''நல்லவராக வாழுங்கள்; அதே நேரம் வல்லவராகவும் வாழுங்கள்.'' உங்கள்—

கனவுகள் நனவாகட்டும்;
கவலைகள் பொடியாகட்டும்;
இலக்குகள் ஈடேறட்டும்;
இதயங்கள் மகிழ்ந்தாடட்டும்;
வருங்காலம் வளமாகட்டும்

என்று வாழ்த்தி விடை பெறுகின்ற நேரத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின்

''பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்''

என்ற வரிகளை நினைவுப்படுத்தி, வருங்காலம் வளமாக என்று வாழ்த்தி மகிழ்ந்து விடை பெற்றுக் கொள்ளுகின்றேன்.

—ஈரோட்டில் 23.12.1978 அன்று வேளாளர் கல்லூரி (பெண்கள்) பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய பேருரை....

# இன்று ரூ 50/-சிறியதுதான் ஆனால் நாளை ரூ.1,000/- மிகப்பெரியதாகும்.

**டி.என்.எஸ்.சி. வங்கியின் புதிய மற்றும் உயரிய திட்டத்தின் கீழ்**

# SP 20 S


மாதம் ரூ. 50/. வீதம் 400 மாதங்களுக்கு நீங்கள் முதலீடு செய்து, அதன் பிறகு. (அதாவது 401வது மாதத்துவக்கத்திலிருந்து) மாதம் ரூ 1,000/ வீதம் என்றும் பெறலாம். ஆம்! ரூ 1,000 ஆயிரம் ரூபாய்

மாத ஓய்வூதியமான ரூபாய் ஆயிரத்திற்குப் பதிலாக ரூ 1,32,000/ எப்போது வேண்டுமானாலும் ரொக்கமாகப் பெறலாம்.

**1,32,000**

**1/2 or 1/5**

விகிதப்படியான ஆதாயத்திற்கு விகிதப்படியாக செலுத்துக



உங்கள் ஆதரவிலுள்ளோர் பயனடையத்தக்க வகையில் கூட்டுக்கணக்கும் வைக்கலாம்.

400 மாதங்களுக்குப்பின் மேற்கூறிய அனைத்துப்பலன்களையும் பெற, மாதத்தவணையில் பணம் செலுத்துவதற்குப் பதிலாக, ரொக்கமாக இன்றே ரூ 6,400 செலுத்தினாலும் போதுமானது.

**6,400**

இந்தத்திட்டம் இந்திய ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதம் குறித்த கட்டளைகளுக்கு உட்பட்டதாகும்

விபரத்திற்கும், கணக்கு திறப்பதற்கான படிவங்களுக்கும் அணுகுக

**தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.**

379. என். எஸ். சி. போஸ் சாலை

சென்னை-600 001. போன் : 20367

TNSC BANK

அல்லது சென்னையிலுள்ள 27 கிளைகளிலொன்று.

# நல்வாழ்வுக்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழுத்திட்டம்



இந்திய அரசு இந்தியா முழுவதிலும் உள்ள கிராம மக்களுக்குச் சுகாதாரப் பணிகள் மற்றும் மருத்துவ உதவி அளிக்கின்ற வகையில் கொண்டு வந்த ''சமூக சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்திற்கான மாற்றுத் திட்டமாகத் தமிழக முதல்வர் அவர்களால் 1977ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் துவக்கப்பட்ட புரட்சிகரமான திட்டம்தான், நடமாடும் மருத்துவக் குழுத் திட்டமாகும்.

நோய்த் தடுப்பு, நோய் தீர்ப்பு, நோய் தீர்ப்புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய மூன்று பணிகளும் ஒரே அமைப்பில் கிராம மக்களுக்கு அவர்களுடைய இருப்பிடங்களிலேயே கிடைக்க வழி செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977-78ஆம் ஆண்டு நடமாடும் மருத்துவக் குழுத் திட்டம் தமிழ்நாட்டில் 24 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் துவக்கப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில் மேலும் 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

1979-80ல் 125 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். இத்திட்டத்தில் கடைசிப் பகுதியாக 1980-81ஆம் ஆண்டில் மீதம் உள்ள 134 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இதன் பயனாக 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதிக்குள் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 385 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் நடமாடும் மருத்துவக் குழுக்களைக் கொண்டதாக இருக்கும்.

**கன்னியாகுமரி மாவட்டம்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தப் புதிய நல்வாழ்வுத் திட்டம் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கோதநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், மேலும் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அகஸ்தீஸ்வரம், ஆறுதேசம், செண்பகராமன்புதூர், முட்டம் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் தக்கலை, அகஸ்தீஸ்வரம், முன்சிறை, தோவாளை, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் செல்கின்றன.

ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் இதுவரை இரண்டு மருத்துவ அதிகாரிகளே இருந்தனர். இப் புதிய திட்டத்தின்கீழ், இப்போது மூன்றாவது மருத்துவ அதிகாரி ஒருவரும் இருப்பார். இதனால் ஒன்றியத்தில் உள்ள எல்லாக் கிராமங்களையும் கவனிக்க முடியும். ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் இரண்டு வாகனங்கள் உள்ளன. தற்போது ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கு என ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 14,000 அல்லாமல் மேலும் ரூ. 10,000மும் மருத்துவக் குழுக்களின் பணிக்காக அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மருந்து கலக்குநர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

**மருத்துவப் பணி:**

இத்திட்டத்தின்கீழ் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி காலையிலும், மாலையிலும் நிலையத்திலேயே தங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பார். மற்ற இரு மருத்துவர்கள் கிராமப் புற மக்களுக்கு நோய்த் தடுப்பு, நோய் தீர்ப்பு, நோய் தீர்ப்புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய பணிகளை அளிப்பார்கள்.

ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில் 6 முதல் 8 கிராமங்களுக்குச் செல்லும். அக்குழு குறிப்பிட்ட கிராமத்திற்கு, ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் செல்லும். அவ்வாறு ஒரு வாரத்திற்குள் அந்த வட்டாரம் முழுவதும் சென்று வரும். சிக்கலான நோய் கண்டவர்களை அருகில் உள்ள பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள்.

இந்த ஐந்து ஆரம்பச சுகாதார நிலையங்களில் இருந்து நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஒவ்வொரு வாரமும் 281 கிராமங்களுக்குச் சென்று பணி புரிகின்றன. 1978 நவம்பர் மாதம் வரை நடமாடும் மருத்துவக் குழுக்கள் 5,988 கிராமங்களுக்குச் சென்று, மக்கள் நல்வாழ்வுப் பணி புரிந்திருக்கின்றன. 1978 நவம்பர் மாதம் வரை இத்திட்டத்தில் 55,962 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றது.

கிராம மக்களுக்கும், வருகை தரும் நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் இடையே உடல் நல

ஆய்வாளர்கள், சிகிச்சை சம்பந்தமான ஆதாரப் பணிகளைச் செய்கிறார்கள். மருத்துவ அதிகாரியும் மருத்துவக் குழுவும் வருவதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட நாட்களில் தகுந்த பணியாளர்களைச் சிகிச்சைக்காக ஒன்று சேர்ப்பார்கள். மற்ற நாட்களில் வேண்டிய மருத்துவப் பணிகளைச் செய்வார்கள். இவ்வாறாக மக்களுக்கு

**நடமாடும் மருத்துவக் குழுக்கள் செல்லுமிடங்களிலேயே நோயாளிகளுக்கு மருந்துகளும் வழங்கப்படுகின்றன.**





மருத்துவப் பணிகள் அவர்கள் இருப்பிடங்களிலேயே அளிக்கப்படுகின்றன.

**நோய் தடுப்புப் பணி:**

கருவுற்ற தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் முறையே 'டெட்டனஸ்' தடுப்பு ஊசியும், முந்நோய்த் தடுப்பு ஊசியும், இரு நோய்த் தடுப்பு ஊசியும் போடப்படுகின்றன. உயிர்ச் சத்து 'ஏ' மருந்தும், இரும்புச் சத்து மாத்திரைகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. 1978 நவம்பர் மாதம் வரை கருவுற்ற தாய்மார்கள் 4,983 பேர்களுக்கு 'டெட்டனஸ்' தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. ஐந்து வயதுக்குட்பட்ட பள்ளி புகா சிறுவர்கள் 3,421 பேர்களுக்கு டிப்திரியா, கக்குவான், டெட்டனஸ் நோய்கள் வராமலிருக்க முந்நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

6 வயது முதல் 12 வயதுக்கு உட்பட்ட ஆரம்பப் பள்ளிச் சிறுவர்கள் 5,246 பேர்களுக்கு டிப்திரியா, டெட்டனஸ் நோய்கள் வராமல் தடுக்கும் வண்ணம் இரு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

இரும்புச் சத்து மாத்திரைகள் கருவுற்ற தாய்மார்கள் 5,049 பேர்களுக்கும் 7,530 குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 15,468 குழந்தைகளுக்குக் கண் பார்வையைப் பாதுகாக்கும் பொருட்டு உயிர்ச் சத்து 'ஏ' மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது சத்துணவு, சுற்றுப்புறச் சுகாதாரம், தாய்சேய் நலம், குடும்ப நலம் பற்றிச் சுகாதாரக் கல்வி விளக்கங்கள் கூறப்படுகின்றன. இத்திட்டத்திற்குக் கிராம மக்களின் ஒத்துழைப்பைப் பெற ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத் தலைவர்கள் உள்ளடங்கிய நல்வாழ்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்களுக்குப் பயன் தரும் வழியில் நல்ல முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

# தீண்டாமை ஒழிப்பு





அரிசனங்கள், தமிழ்நாட்டு மக்கள் தொகையில் சுமார் 18 சதவிகிதம் உள்ளனர். மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் பன்னெடுங் காலமாகத் தீண்டாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டுச் சமுதாயத்தில் அவர்களுக்குரிய இடத்தையும் மரியாதையையும் பெறமுடியாத நிலையில் இருந்தனர். அவர்களின் நிலையை உயர்த்த, சமூகத்தில் மரியாதைக்குரிய இடத்தைப் பெற்றுத்தர, பல்வேறு தலைவர்கள் வெவ்வேறு கால கட்டங்களில் அவரவர் வழியில் பாடுபட்டனர்.

அண்ணல் காந்தி அடிகளும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், அமரர் அண்ணா அவர்களும் இந்தச் சமூகத்திற்குப் புதுவாழ்வு அளிக்க முயன்ற தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

அண்ணா வகுத்துக்காட்டிய அறவழியில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு சாதி சமய பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

அரிசனங்கள் என்று காந்தி அடிகளால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஆதிதிராவிட பெருங்குடி மக்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் தமிழக அரசு அயராது பணியாற்றி வருகிறது.

*—தீண்டாமை ஒழிப்பு வார விழா (அரிசன வாரம்) குறித்து மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விடுத்துள்ள செய்தி.*



கடமாடும் மருத்துவக் குழுவில் கருவுற்ற தாய்மார்களுக்கு ஆலோசனை கூறுதல்.

அண்மையில் குமரி மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள், இந்தத் திட்டம் விரைவில் குமரி மாவட்டத்தில் மேலும் நான்கு ஊராட்சி ஒன்றியங்களிலும் அமல் படுத்தப்படும் என்று கூறியுள்ளார். அப்படி குமரி மாவட்டம் முழுவதும் இத்திட்டம் செயல்படும்போது, மக்கள் நல்வாழ்வுப் பணி மிகச் சிறப்பாகக் கிராம மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் என்பது உறுதி.



# திருவள்ளுவர் விருது





**'வீணைக் கலைஞர்'**
**திரு கே. பி. சிவானந்தம்**

திரு க. பொன்னையா பிள்ளை, திருமதி ராமம்மாள் தம்பதிகளுக்கு *1917* மார்ச்சில், தஞ்சாவூரில் பிறந்தவர் இவர். *1938*-ல் 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்றார். யாழ் நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதனை வாசித்தும் காட்டி, 'வீணை வித்தகர்' என்னும் பட்டம் பெற்றார். *1969*-ல் இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது பட்டமளித்து இவரைச் சிறப்பித்தது.

**'நரம்பிசைக் கலைஞர்'**
**லால்குடி திரு ஜெயராமன்**

திரு. கோபால் ஐயர், திருமதி சாவித்திரி அம்மாள் தம்பதியர்க்கு, *1930* செப்டம்பரில் திருச்சி மாவட்டம் இடையாற்றுமங்கலத்தில் பிறந்தார். நரம்பிசைக் கருவிகளில் ஒன்றான வயலினில் சிறப்புற்றுத் திகழும் இவர்'பத்மஸ்ரீ 'சங்கீத சூடாமணி' போன்ற எண்ணற்ற விருதுகள் பெற்றவராவார்.

**'நாயனக் கலைஞர்'**
**ஷர்மகிரிப்பேட்டை திரு கே. கிருஷ்ணன்**

**இனிமையும், நயமும் இணைந்த நாதலயத்தோடு நாயனத்துறையில் பெருந் தொண்டாற்றி வரும் இவர், சிறந்த இசைக் குடும்பத்தில், 1925-ல் பிறந்தவர். இயல் இசை நாடக மன்றத்தின் 'கலைமாமணி' விருது பெற்ற** பெருமையாளர். உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் போய் நாதசுர இசையின் மேன்மை காட்டி வந்தவர்.

**'பன்மொழிப் புலவர்'**
**திரு கா. அப்பாத்துரையார்**

ஆங்கிலத்தில் எம். ஏ., பட்டமும் தமிழில் எம். ஏ., பட்டமும் பெற்றுள்ள இவர், இந்தியில் 'விசாரத்' பட்டம் பெற்றுள்ளார். பள்ளி ஆசிரியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் பணி புரிந்துள்ள இவர், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி என்னும் சிற்றூரில் 24-6-1907-ல், காசிநாதர், முத்தம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். பன்னிரண்டு மொழிகளுக்கு மேல் அறிந்த இவர் பல நூல்களை எழுதியுள்ளார்.

**'இசைப் பேரறிஞர்'**
**திரு ம. ப. பெரியசாமித்தூரன்**


இசைப் பாடல்கள் பலவற்றை உருவாக்கியுள்ள இவர், கோவை மாவட்டத்தைச் சார்ந்த மொடக்குறிச்சியில் *26-9-1908*-ல், கே. ஏ. பழனியப்பா-பாவை அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

பள்ளி ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் பணியாற்றிய இவர், பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளார். சுப்பிரமணிய பாரதியாரின் மறைந்திருந்த பல படைப்புகளை 'பாரதி தமிழ்' என்று நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.



# திருநாள் (15-1-1979)

## பெற்றோர்



**'தவில் கலைஞர்'**
**வலங்கைமான் திரு சண்முகசுந்தரம்**

தஞ்சை மாவட்டம் சேகல்புரத்தில், திரு ஏ. வி. ஆறுமுகம் பிள்ளை அவர்களின் மகனாகப் பிறந்த இவர், 1970-71ஆம் ஆண்டிற்கான சிறந்த தவில் கலைஞராகத் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு 'கலைமாமணி' விருதளிக்கப் பட்டவர்.

**'முழவிசைக் கலைஞர்'**
**திரு சி. எஸ். முருகபதி**

சிறந்த இசைமரபில் வந்தவரான திரு சிற்சபை சேர்வையின் புதல்வராக 1914-ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் பிறந்தவர் இவர். 1949-ல், சிவகங்கை மன்னர் இவரைத் தமது அரசவைக் கலைஞராக நியமித்துப் பெருமைப் படுத்தினார். 1969-ல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைமாமணி' விருதளித்தது. பின்னர், பொற்கிழி அளித்தது.

**'குரலிசைக் கலைஞர்'**
**டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா**

திரு. பட்டாபிராமையா, திருமதி சூர்ய காந்தம்மா தம்பதிகளுக்கு 1930 ஜூலை 6-ஆம் நாள், ஆந்திர மாநிலத்தில் உள்ள சங்கர குப்தம் என்னுமிடத்தில் பிறந்தவர் இவர். இவரது திறமையைப் பாராட்டிப் பல இசை மன்றங்களும், பல்கலைக் கழகங்களும், மத்திய-மாநில அரசுகளும் இவருக்கு எண்ணற்ற பட்டங்களையும், விருதுகளையும் அளித்துச் சிறப்பித்துள்ளன. ஆந்திரப் பல்கலைக் கழகம் மூலம் இசையில் 'டாக்டர்' பட்டம் பெற்ற இவர், மியூசிக் அகாடமியின் 'சங்கீத கலாநிதி' பட்டமும் பெற்றவராவார்.

**'ஆடற் கலைஞர்'**
**திருமதி வைஜயந்திமாலா பாலி**

திரு எம். டி. இராமன் அவர்களின் புதல்வியாக 1933ஆம் ஆண்டு ஆகஸ்டு 13ஆம் நாளன்று சென்னையில் பிறந்தவர் இவர். பண்பட்ட கலையான பரதத்தின் நுணுக்கங்களைக் கற்றுச் சிறந்த இவர் 1969-ல் 'பத்மஸ்ரீ' விருது பெற்றவர். பரதக்கலை மேன்மையினைப் பிறநாடுகளுக்கெல்லாம் சென்று நிலைநிறுத்தியவர்.

**'குரலிசைக் கலைஞர்'**
**மதுரை திரு எஸ். சோமசுந்தரம்**

திரு. சச்சிதானந்தம் பிள்ளை, திருமதி கமலாம்பாள் தம்பதிகளுக்கு 1919-ல், மதுரையில் பிறந்தவர். வாய்ப்பாட்டில் தமக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டுள்ள இவருக்கு 1971-72-ல், தமிழிசைச் சங்கம் 'இசைப் பேரறிஞர்' விருதளித்துச் சிறப்பித்தது. 1973-ல், இயல் இசை நாடக மன்றத்தின் 'கலைமாமணி' விருது பெற்றார்.

**'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர்'**
**திரு வ. சுப்பையா**

பண்டைத் தமிழ் இலக்கியங்களை வெளியிட்டுத் தமிழ்த் தொண்டு செய்து பெரும் பதிப்பாளரான இவர், பாளையங்கோட்டையில் 22-9-1897-ல், வயிரமுத்து, சுந்தரத்தம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் ஏட்டை 53 ஆண்டுகளாக, அதன் ஆசிரியராக இருந்து நடத்தி வருகிறார். மறைமலையடிகள் நூலகத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார். பதிப்பாளர் என்ற வகையில் பல்வேறு பரிசுகள் பெற்றுள்ளார்.

**'அரசுக் கலைஞர்'**
**ஞா. தேவநேயப் பாவாணர்**

மொழிநூல் மூதறிஞரான இவர், நெல்லை மாவட்டத்தில் 7-2-1902-ல், ஞான முத்தனாருக்கு மகனாகப் பிறந்தார். தனிக் கல்வியின் வாயிலாக முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இவர், கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்திருக்கிறார். செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநராகத் தமிழக அரசால் நியமிக்கப்பெற்றுப் பணியாற்றி வருகிறார்.

**'கல்வியாளர்'**
**திரு தி. சு. அவினாசிலிங்கம்**

நாட்டுப் பற்று, மொழிப்பற்று மிக்க கல்வியாளரான இவர், திருப்பூரில் 5-5-1903-ல் சுப்பிரமணியனார், பழனியம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். சட்டக் கல்வி பயின்ற இவர், 1946 முதல் 1949 வரை சென்னை மாநிலத்தின் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். பள்ளிகளில் திருக்குறளுக்குச் சிறப்பு வகுப்புகளை உருவாக்கினார். பல நூல்களை எழுதியுள்ளார். கலைக் களஞ்சியத் தொகுதிகள் உருவாகி வரப் பெரும் முயற்சிகள் செய்தார்.

## மாதம் நூறு ரூபாய் ஓய்வூதியம் பெற்ற தமிழறிஞர்கள்

உதவித் தொகை பெற்ற தமிழறிஞர்கள் விவரம் வருமாறு:

கவிஞர் தே. ப. பெருமாள், திரு கே. ராஜகோபாலாச்சாரியார், திரு. நாரண துரைக்கண்ணன், திரு கே. ஜே. வேதமுத்து, திரு வே. மாணிக்கவாசகம், திரு பி. ராகவன், திரு அழகானந்த ரங்கநாதன் திருமதி. ரஞ்சிதம் இராமசாமி.(சென்னை)

சுவாமி சுந்தரபாரதி (பாரதிபுரம்)

திரு எஸ். கே. இலட்சுமணன் (சக்கரமல்லூர்).

திரு நா. இராமலிங்கம் (அண்ணாமலை நகர்)

திரு அ. பெ. அழகராயபிள்ளை (தாரமங்கலம்)

வெள்ளியங்காட்டான் (பீளமேடு), திரு எஸ். முத்துசிரங்கம் (பவானி), புலவர் குமரஞானசம்பந்தம் (கோபிச்செட்டிப்பாளையம்), புலவர் முகமது செரீப் (அண்டகுளம்), கு. புலவர் தங்கவேலன் (மகாராஜபுரம்)

திரு மு. சடகோபன் (பள்ளியக்கிராமம்), புலவர் வி. பொ. பழனிவேலனார் (திருத்துறைப்பூண்டி), வேதநாயக சந்திரசேகரன் (இளவனூர்).

புலவர் திரு எஸ். முத்துக்கிருஷ்ணன் (தஞ்சை), து. கந்தசாமி (திருச்சி உடையார்பாளையம்), கேசவராமசாமி (காமன்கோட்டை) இராமசுப்பிரணியம் என்கிற மணிஎன்ற அடிகள் (நரிக்குடி), அ. சுருளியயாண்டி பர்வலர் (கோம்பை அஞ்சல்) அரங்க சீனிவாசன் (கோவிலூரா) புலவர் போற்றிக்கண்ணனார் (திருவேட்ட நல்லூர்)திரு பி.ஸ்ரீஆச்சாரியா (விட்டலபுரம்).



# வரப்போரம் வந்து பாருங்கள்



நண்பர் சண்முகம் வீட்டுக்கு வந்தபோது நான் என் பத்து வயதுப் பையனைத் திட்டிக் கொண்டிருந்தேன். ''நாலு சாமான் தானே வாங்கி வரச் சொன்னேன். ஐந்தாவது எப்படி வந்தது?'' என்று எரிந்து விழுந் தேன்.

''இந்த வெல்லம் நான் காசு கொடுத்து வாங்கலை அப்பா, கடைக்காரர் கொசுறு கொடுத் தது....'' என்றான் என் மகன்.


''இது இந்த ஊரில் வழக்கம் தான். வாடிக்கைக் காரர்களைப் பிடிப்பதற்காகக் கடைக்காரர்கள் கொசுறு கொடுப்பார்கள். அதற்கு நாம் காசு கொடுக்க வேண்டிய தில்லை. இனாம் அது. இப்படி ஒரு காசு செலவு இல்லாமல், கொசுறு சாகுபடி செய்யப்படும் பயறு வகைகளைக் காட்டத்தான் இன்றைக்கு உங்களையும் பத்திரி கைக்காரர்களையும் கூட்டிக் கொண்டு போகப் போகிறோம். சீக்கிரம் புறப்படுங்கள்'' என்று வந்த காரியத்தைத் தெளிவு படுத்தினர், சேலத்தில் மாவட்ட விவசாய அலுவலராகப் பணி புரியும் நண்பர் திரு சி.டி. சண் முகம்.

''வயலில் நெல் சாகுபடி செய் கிறோம். நெற்பயிர் நடவின் போது வரப்பில் உளுந்து ஊன்றி விட்டால் போதும். அதற்காகத் தனி முயற்சி எதுவும் தேவை யில்லை. விதைக்கு ஆகும் செல வைத் தவிர வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நெல் சாகுபடியோடு, கொசுறுப் பயி ராக இந்த உளுந்து கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ உளுந்து ஊன்றினால் போதும். இதற்குச் செலவு மூன்று ரூபாய் தான். குறைந்தது பத்து கிலோ மகசூல் காணும். எனவே, மூன்று ரூபாய் மூலதனத்தில், எந்தச் சிரமமும் இல்லாமல் முப்பது ரூபாய் அடையலாம்...'' இப்படி அவர் விளக்கிச் சொன்னதும் 'அப்படியா?' என்ற ஆர்வம் மிகுந்த கேள்விக் குரலுடன் அவ ரைப் பின் தொடர்ந்தனர் பத்தி ரிகை நிருபர்கள். எங்களுடன் துணை வேளாண்மை இயக்குநர் திரு எஸ். வி. சீனிவாசன், நாமக் கல் மாவட்ட விவசாய அலுவலர் திரு. வரதராசன், சங்ககிரி கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு வேல்முருகன், எடப்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு குப்புசாமி ஆகியவர்களும் வந்தனர், பயிரையும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை யும் நேரில் காட்டி விளக்கிச் சொல்ல.

''வரப்பில் உளுந்து, பச்சைப் பயறு, காராமணி என்று பயிரிட லாம். விதைக்கு ஆகும் சொற்பச் செலவு தவிர, வேறு செலவு கிடையாது, தஞ்சையில் இம் மாதிரி செய்வது சர்வ சாதார ணம். வரப்புத் துவரையென்றே சொல்வார்கள். சேலத்தில் பரீட் சார்த்தமாகச் சென்ற ஆண்டில் 100 ஏக்கரில் முயற்சி செய்து பார்த்தோம். நல்ல பலன் கிடைத் தது. இந்த ஆண்டு எடப்பாடி வட்டாரத்தில் 2,000 ஏக்கரிலும் நாமக்கல் விவசாய மாவட்டத் தில் 15,000 ஏக்கரிலும், சேலம் மாவட்டம் முழுவதிலும் மொத் தம் 20,000 ஏக்கரிலும் பயிரிட்டி ருக்கிறோம். அந்த வரப்புப் பயிர் களை இப்பொழுது நேரில் உங் களுக்குக் காட்டுவதற்காகத்தான் அழைத்துப் போகிறோம்'' என் றார் துணை வேளாண்மை இயக்குநர்.

''T-9 உளுந்து 65 நாள் பயிர். இதற்கு இந்தப் பருவம் என் றில்லை. ஆண்டு முழுவதும் பயி ரிடலாம். விளைச்சல் அதிகம். அளவு பெரியது. சுவை மிகுந்தது. இந்த ஆண்டு 75 டன், விவசாயி களிடமிருந்து கொள்முதல் செய்து, மற்ற விவசாயிகள் விதைப்பதற்காக அடுத்த ஆண் டில் வினியோகிக்கப் போகிறோம். இதன் மூலம் 7,500 ஏக்கர் பயன் பெறும்'' என்றார் நாமக்கல் மாவட்ட விவசாய அலுவலர்.

ஒரு நிருபர் அப்பொழுதுதான் வீட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுத்து விட்டு வந்திருப்பார் போலிருக்கிறது. ''பருப்பு வகை களுக்கு நாம் ஏன் அதிகம் செல விட வேண்டியிருக்கிறது? ஒரு



மின்பொறி விளக்குப் பொறி விளக்கப்படுகிறது

கிலோ சர்க்கரைக்கு ரூ. 2.30 கொடுக்கிறோம். அரிசிக்கு ரூ. 2 கொடுக்கிறோம்; துவரம் பருப்புக்கு, உளுத்தம் பருப்புக்கு ஏன் நாலு, ஐந்து என்று கொடுக்க வேண்டும்'' என்று கேட்டார். நியாயமான கேள்வி என்று எல்லாரும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள்.

துணை இயக்குநர் விளக்கினார். ''நவதானிய உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பருப்பு உற்பத்தியில் நாம் பற்றாக்குறையில் உள்ளோம். இப்பொழுது விளைகிற பயிருக்குப் பதில் முழுதுமாகப் பருப்பு வகைகளைப் பயிரிடுவோம் என்ருல், அது விவசாயிகளுக்கு இலாபகரமானது அல்ல. அதனுல் சாகுபடிப் பயிரோடு ஊடு பயிராகப் பருப்பு வகைகளை விளைவிக்க முயற்சி செய்கிறோம். சில இடங்களில் முழு நிலத்திலும் கூடப் பருப்பு விளைக்கிருர்கள்..'

பொங்கும் நெல்லையும் பூரிக்கும் உளுந்தையும் பார்ப்பதற்காக நாங்கள் விவசாயத்துறை அலுவலர்களுடன் எடப்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சார்ந்த வெள்ளரி வள்ளி, கண்ணாங்காடு, நெடுங்குளம், சிலுவம் பாளையம், கோம்புக்காடு ஆகிய கிராமங்களுக்குச் சென்றோம். பச்சைப் பசும்பயிர்-பொன்னிறக் கதிர்கள் கொண்ட வயல்களுக்கு இடையே, மந்தாரமான பருவ நிலையில் செய்த இந்தப் பயணம் மனோரம்மியமாகவும் பயனுள்ள தாகவும் அமைந்தது.

பேட்டியின்போது விவசாயிகள் சொன்னார்கள்'' ''உழைப்பு இல்லாமல் உளுந்து கிடைக்கும் என்பதை நாங்கள் முதலில் நம்பவில்லை. விவசாயத் துறையினர் அதைச் செய்து காட்டிய பிறகு இப்பொழுது நாங்களே விரும்பி எங்கள் வரப்புகளில் உளுந்து ஊன்றி வைக்கிறோம்....''

''சில இடங்களில் விவசாயிகளுக்குத் தெரியாமல் கூட நாங்கள் உளுந்து விதைகளைப் போட்டுவிட்டுப்போய்விட்டோம். உளுந்து வெளியே தெரிந்தபோது விவசாயிகளுக்கு ஒரே ஆச்சரியம். எங்களுக்கு எங்கள் முயற்சி வெற்றி கண்டதில் மனநிறைவு'' என்று விவசாய்த்துறை அலுவலர்கள் அகமகிழ்வுடன் கூறினார்கள்.

அதைக் கேட்டபொழுது ஒரே நிலத்தில் விளைந்த அரிசியையும் உளுந்தையும் கலந்து சுட்ட இட்டிலியைச் சாப்பிட்டு, அதன் சுவை எப்படியிருக்கும் என்று பார்க்கத் தோன்றியது எனக்கு! அதைச் சொன்னதும் ''இது அபார யோசனை!'' என்று சிரித்தார் ஒரு பத்திரிகையாளர். அந்த ஆனந்தத்தில் வரப்பு வழுக்கிவிடக் கீழே விழுந்து விட்டார். அதையும் ஒரு சுவாரசியமான நிகழ்ச்சியாக்கிவிடவிழைந்த இன்னொருபத்திரிகையாளர்'இவ்வளவு நேரம் வரப்பில் உளுந்து பார்த்தார். இப்பொழுது வரப்பில் விழுந்து பார்த்தார்'' என்று விமர்ச்சித்து மகிழ்ந்தார்.

அடுத்து, புகையான் பூச்சி ஒழிப்புப் பற்றி விளக்கினார் திரு சண்முகம்; ''பி. எச். சி. பத்து சதவிகிதத் தூள் அடித்தால் போதும். கிலோ 90 காசுதான். ஏக்கருக்கு 20 கிலோ பிடிக்கும். ஒரு பயிருக்கு ஒரு தடவை போதும். அவசியமானால் இரண்டு தடவை அடிக்கலாம். அதற்கு மேல் அவசியமில்லை. புகையான் பூச்சி எங்கும் இருக்கிறது. தூருக்கு அடியில் பூச்சி இருக்கும். விசைத் தூவிகளைத் தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. 'மினி டஸ்டர்' என்று ஏழு ரூபாய் விலையில்கூட 'மருந்து தூவி' இருக்கிறது.

''இந்த நிலத்தில் துவரைக்கு பி. எச். சி. 10 சதவிகித 'டஸ்டிங்' செய்கிருர்கள். இது காய்ப் புழுவுக்காக அடிக்கப்படுகிறது. காய்த்துளைப்பான் துளைக்காமல் இருக்க, பூவெடுக்கும்பொழுது ஒரு தடவையும், காய்க்கும் பொழுது மற்றொரு முறையும் சாகுபடிக்கு முன்னால் இன்னெரு தடவையும் இப்படி மூன்று முறை அடித்தால் துவரையை முற்றிலுமாகக் காப்பாற்றி விடலாம்.

துவரையோடு ஊடு பயிராகக் கொள்ளு விதைத்திருக்கிறார்கள். கொள்ளுக்கு முன்னால் நிலக் கடலையை விதைத்தார்கள். நிலக்கடலைக்கு ஜிப்சம் போட்டால் விளைச்சல் நன்றாக இருக்கும். நிறமும் எண்ணெய்ச் சத்தும் மிகும். ஒரு ஏக்கருக்கு

இரண்டுமூட்டை ஜிப்சம்போதும். ஒரு மூட்டை ஜிப்சத்தின் விலை எட்டு ரூபாய்தான். அதில் 50 கிலோ இருக்கும். சென்ற ஆண்டு சேலம் மாவட்டத்தில் 300 டன் ஜிப்சம் விநியோகிக்கப்பட்டது. இது இந்த ஆண்டு பத்து மடங்கு அதிகரித்து, 3,000 டன் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இது 30,000 ஏக்கருக்குப் போதுமானது. சேலம் மாவட்டத்தில் மொத்தம் 2.4 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிராகிறது. இந்தப் பரப்பளவு முழுவதற்கும் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஜிப்சம் போடப்படும் நிலை உருவாகி விடும் என நம்புகிறோம்.

''பயிரை அழிக்கும் இன்னொரு கொடிய பூச்சி யானைக் கொம்பன் ஈ. இந்த ஈ தாக்கினால் பயிருக்கு இலை வருவதற்குப் பதில், வெங்காயத்தாள் மாதிரி உருண்டையான குழாய் வருகிறது. யானைக் கொம்பன் ஈ தாக்கியதற்கு அறிகுறி இதுதான். இந்த அறிகுறி, தாக்குதலுக்குள்ளான 15 நாட்கள் கழித்துத்தான் தெரியும். அதனால், நாற்றுக்கே டர்ஸ்பான் டிரீட்மெண்ட்' கொடுத்து, பயிர்ப்பாதுகாப்பு அளிக்கிறோம் குழந்தைகளுக்கு 'இம்யூனிசேஷன்' போல, பயிருக்கு இந்த 'டிரீட்மெண்ட்.' நாற்று 'டரஸ்பான் கரைசலில் 20 நிமிடம் ஊறியிருந்தால்' 45 நாட்களுக்குப் பாதுகாப்பு வந்து விடும்.''.

''இப்படி மருந்து தெளிக்காமல் பூச்சிகளை அழிக்க வேறு வழி இல்லயா?'' என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''இருக்கிறது. அதையும் அருகில் வந்து பாருங்கள். இதுதான் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பின் உதயம்—மின் பொறி விளக்கு. இங்கே பாருங்கள். ஒரு சிலிண்டர் அமைப்பு. மேலே மெர்க்குரி விளக்கு. அடியில் பொறி. இரவில் இந்தப் பிரகாசமான விளக்கு எரியும்பொழுது, அதை நோக்கி எல்லா வகையான பூச்சி பொட்டுகளும் பறந்து வந்து, அடியில் உள்ள பொறியில் விழுந்து மாய்ந்து விடும். தினமும் இந்தப் பொறியைக் காலி செய்து சுத்தம் செய்து வைக்கிறோம். சுமார் 2 பர்லாங்கு சுற்றளவுக்கு இந்த ஒரு மின்பொறியினால்பயன் உண்டு. ரூ. 350 ஆகும். இந்தப் பொறியை ஊராட்சி மன்றம் வாங்கி வைத்துள்ளது. இப்பொழுது இந்தப் பொறியை மேலும் பலர் கேட்கிறார்கள். சைனாவில் இந்த முறையினால் தான் பயிரை அழிக்கும் பூச்சி பொட்டுகளை ஒழித்துக் கட்டியிருக்கிறார்கள். அங்கே இரவில் தெருவிளக்குகளுக்குப் பதில், இந்த வயல் விளக்குகள்தான் எரியுமாம்....'' என்று விளக்குகிறார் திரு. வரதராசன்.

''இது ஒன்றும் புதிய கண்டுபிடிப்பு அல்ல. பழைய காலத்தில் அரிக்கன்லைட் வைத்து, அடியில் தாம்பாளம் வைப்பார்கள்'' என்று, தனது அனுபவ முத்திரையைப் பதித்தார் இன்னொரு பத்திரிகையாளர்.

''எல்லாம் பழைய முறைதான் மின் பொறி விளக்கு பழமையிலிருந்து ஒரு இம்ப்ரூவ்மெண்ட அவ்வளவுதான்..'' என்றார் திரு. சீனிவாசன்.

''அப்படிப் பார்த்தால் உண்பது, உழுவது, விதைப்பது, அறுப்பது எல்லாமே பழமைதான் ...'' என்றார் இன்னொருவர்.

''இந்தப் பொறியில் எல்லா வகையான பூச்சிகளும் விழுந்து செத்து விடுகின்றனவே, பயிருக்கு நன்மை செய்யும் பூச்சிகளும் அதில் இருக்குமே?'' என்று நான் எனது சந்தேகத்தைக் கிளப்பினேன். —

''அதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். மின் பொறி விளக்கில் அழியும் பூச்சிகளில் பெரும்பாலும் கேடு விளைவிப்பவைதான். தாய்ப் பூச்சி இவ்வாறு அழிக்கப்படுவதால், அடுத்த பருவத்தில் முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும் வாய்ப்பு இல்லாமல் செய்து விடுகிறோம்....'' என்றார் துணை வேளாண்மை இயக்குநர்.

''வரப்போரம் வந்து பார்த்து இவ்வளவு விஷயங்களைப் புரிந்து கொள்ள முடிந்தது ஒரு நல்ல வாய்ப்புத்தான்'' என்றார் ஒருவர்.

வாய் திறந்து ஒருவர்தான் அப்படிச் சொன்னார் என்றாலும், எல்லாருடைய எண்ணமும் அதுவாகவே இருந்தது என்பதைக் குறிப்பிடவும் வேண்டுமோ?

—மு. முத்துக் காளத்தி

சேலம் மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர்

(செய்தி-மக்கள் தொடர்பு)

## முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில்-......!



32 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் இரண்டாவது தடவையாக வனவிலங்குக் கணக்கெடுப்பு அண்மையில் நடைபெற்றது.

192 காட்டு எருமைகள், 213 கடா மான்கள், 190 காட்டுப் பன்றிகள், 30 காட்டு மாடுகள், 13 கரடிகள், 1,132 புள்ளி மான்கள், 61 செந்நாய்கள், 115 மலை அணில்கள், 393 அனுமான்வால் குரங்குகள், 16 சிறுத்தைகள், 20 புலிகள் மற்றும் கீரிப்பிள்ளை, முயல் போன்ற வனவிலங்குகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

முதலாவது கணக்கெடுப்பில் இருந்ததைவிட புலிகளின் எண்ணிக்கை இப்போது கூடியிருக்கிறது. காட்டு யானைகளின் எண்ணிக்கை முன்பு இருந்ததைவிடக் குறைந்துள்ளது. இது பருவகால இடப்பெயர்ச்சியின் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# மிகவும் நம்பிக்கையூட்டும் இணையற்ற ஆடைகள்...

## கோ-ஆப்டெக்ஸ்

அறிமுகப்படுத்தும்
ஈடு இணையற்ற
புதியவகை

# பாலியஸ்டர்


சர்ட்டிங்குகள்

எமது பிரசித்திபெற்ற விற்பனை நிலையங்களில் கிடைக்கும்







100% பாலியஸ்டர்



80X20 பாலியஸ்டர் பிளண்டட்




80X20 பாலியஸ்டர் பிளண்டட்



67X33 பாலியஸ்டர் பிளண்டட்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# அரிசன மக்கள் நலம் பெற்றிட...

"தாழ்த்தப்பட்ட மக்கள் வாணிபம் செய்து அதன் மூலம் முன்னேற 85 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது'' என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பெ. சவுந்தர பாண்டியன் அவர்கள், ஜனவரி 30ந் தேதி சென்னைக் கலைவாணர் அரங்கில் நடை பெற்ற அரிசன நலவார விழாவில் கூறினார்.

இந்த விழாவுக்குத் தலைமை வகித்த சட்டப் பேரவைத் தலைவர் திரு முனுஆதி அவர்கள் பேசுகையில், ''அரிசன மக்களும் சமூகத்தில் சம அந்தஸ்து பெற அதிக நிதி ஒதுக்கி, அவர்களுக்குத் திட்டங்களை வகுத்து முதல்வர் அவர்களும், அமைச்சர் சவுந்தரபாண்டியன் அவர்களும் காரியம் ஆற்றி வருகிறார்கள்'' என்று குறிப்பிட் டார்.

''தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் நோக்கங்களைச் செயல் படுத்தும் வகையில் அரிசன மக்கள் நலன் காப்பவர் முதல்வர் அவர்கள்தான்'' என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறி னார்.

இந்த விழாவில் ஆறு பேர்களுக்குத் தோல் தைக்கும் எந்திரங்களையும், சல வைத் தொழிலாளர்கள் நான்கு பேர் களுக்குச் சலவைத் தொழிலுக்கான கருவி களையும், காலணி தைக்கும் தொழி லாளர் இருவருக்கும் தச்சுத் தொழி லாளி, சவரத் தொழிலாளி ஆகியோருக்கும் தொழிற்கருவிகளையும் அரிசன நலத் துறை அமைச்சர் வழங்கினார்.

சென்னை மாவட்டத்தில் பள்ளி இறுதித் தேர்வில் முதன்மையாகத் தேர்வு பெற்ற அரிசன மாணவர், மாணவி இருவருக்கும் தலா ரூ.100 வீதம் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அரிசன நல்வாழ்வுக்காகச் சிறந்த முறையில் பணியாற்றிய சமூகப்பணி ஊழியர் ஒருவருக்கும் பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.


கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு ஒன்றரை சவரன் தங்கப் பதக்கங்களையும், சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.200 வீதமும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.









# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!




டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்




இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை. நாற்காலி




பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# எந்தத் தியாகமும் செய்வோம்



**முதல்வர் எம்.ஜி.ஆர்.**

இயல், இசை, நாடகம் என்ற மூன்று துறைகளிலும் வளமை பெற்று உயர்தனிச் செம்மொழியாக விளங்குகிறது நமது தமிழ்மொழி.

எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இப்படி மூன்று பிரிவாகப் பிரித்தார்களோ? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இலக்கணம் வகுத்தார்களோ? இலக்கியங்களை உருவாக்கினார்களோ? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது, தமிழ்மொழியின் மேன்மையும், தனித் தன்மையும் புலப்படும்.

அறிவியல் கருத்துக்களையெல்லாம் தமிழில் சொல்லுகின்ற நிலைமை மலர வேண்டும்; தமிழிலேயே அறிவியல் கருத்துக்களைக் கற்றுக்கொண்டால், வெளிநாடுகளுக்கு-வெளியூர்களுக்கு சென்று எவ்வாறு பிழைப்பது என்று சிலர் கேள்வி எழுப்பக்கூடும். அப்படிப்பட்டவர்கள் ஜப்பான் நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜப்பானில் அறிவியல், தொழில்நுட்ப நூல்கள் எல்லாம் பெரும்பாலும் ஜப்பானிய மொழியில்தான் கிடைக்கின்றன. ஆங்கில மொழியில் நூல்கள் வேண்டுமென்றால், தேடிப்பிடித்துத்தான் வாங்க வேண்டும். தாய்மொழியிலேயே அறிவியலைப் பயிலும் அவர்கள் முன்னேறவில்லையா?... உள்ளத்தில் ஏற்படும் நோய் உடலையும் பாதிக்கிறது. மொழிப்பற்று இல்லாதவர்களைத் தாக்கும் நோய்க்கு மொழிப்பற்றுதான் மருந்து ஆகும்.

தாய்மொழி தமிழ் என்று தெரிந்து கொள்ளாதவர்களுக்குத் தாய் மொழிதான் மருந்து. இதற்கு வேறு மருந்துதர முடியாது.

சென்னை மருத்துவக் கல்லூரி வாசலில், தமிழில் பெயர்ப்பலகை வைக்கப்பட வேண்டும். மருத்துவக் கல்லூரிக் கட்டடத்திற்கு உட்பட்ட பகுதிகளில், முக்கியமான இடங்களில் எல்லாம் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லும் திருக்குறள்களைப் பலகைகளில் எழுதி வைக்க வேண்டும்.

**தமிழ்மொழியை எந்த வகையிலும் இரண்டாந்தர மொழியாக ஆக்கத் தமிழகம் ஒப்பாது.**

**தமிழக அரசு எந்தத் தியாகத்தையும் செய்து தமிழைக் காப்பாற்றும்.**

*(29-1-79 அன்று சென்னை மருத்துவக் கல்லூரி பொங்கல் விழாவில் ஆற்றிய சிறப்புரையிலிருந்து......)*



# இந்தித் திணிப்புப் பிரச்சினை



## அனைத்துக் கட்சிக் கூட்டம்

'இந்தித் திணிப்பை என்றுமே ஏற்க மாட்டோம்' என்ற தமிழக மக்களின் இதய உணர்வுகளை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறவும், இந்தித் திணிப்புப் பிரச்னையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்து முடிவெடுக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி ஆர். அவர்கள், 23-1-79-ல் தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன், எஸ். டி. சோமசுந்தரம், கே. ஏ. கிருஷ்ணசாமி, இராம. வீரப்பன் ஆகியோரும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம்

அனைந்திந்திய அண்ணா தி. மு. க. சார்பில் பொதுச் செயலாளர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன்.

தி. மு. கழகத்தின் சார்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் திரு. மு. கருணாநிதி.

இந்திரா காங்கிரஸ் சார்பில், ராஜ்ய சபை உறுப்பினர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார்.

ஜனதா கட்சிச் சார்பில் திரு எஸ். வி. இலட்சுமணன்.

சுவரண்சிங் காங்கிரஸ் சார்பில், பாராளுமன்ற உறுப்பினர் திரு ஓ. வி. அளகேசன்.

மார்க்சிஸ்ட் கட்சிச் சார்பில் சட்ட மன்ற உறுப்பினர் திரு. சங்கரையா.

வலது கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பில் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. மாணிக்கம்.

முஸ்லீம் லீக் கட்சிச் சார்பில் திரு. அப்துல் சமத்.

தமிழ் மொழிக்குத் தரப்படவேண்டிய பாதுகாப்புக் குறித்தும், பிறமொழி ஆதிக்கத்தை எதிர்ப்பது குறித்தும், இன்னும் பல பிரச்னைகள் குறித்தும் முதல்வர் அவர்கள் மற்ற கட்சித் தலைவர்களுடன் விவாதித்தார்.

இந்தக் கூட்டத்தின் தொடர்பாக, முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டதாவது:

''இன்றையக் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் மனம்விட்டுத் தங்களது சிறப்பான யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

''இந்தித் திணிப்புக் குறித்துத் தமிழக மக்கள் எந்த அளவிற்கு மனவேதனை அடைந்திருக்கிறார்கள் என்பதை அவர்களது கருத்துக்கள் பிரதிபலித்தன.

தனக்கென வாழ்ந்தது சாவுக்கொப்பாகும்
தமிழுக்கு வாழ்வதே வாழ்வதாகும்
—பாரதிதாசன்

தமிழ்நாடு முஸ்லீம் லீக் சார்பில் திரு. செய்குத்தம்பி,

உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. மார்க்கபந்து.

திரு கி. வீரமணி தலைமையில் உள்ள திராவிடர் கழகத்தின் சார்பில் வழக்கறிஞர் திரு. துரைசாமி.

திரு. கிருஷ்ணசாமி தலைமையில் உள்ள திராவிடர் கழகத்தின் சார்பில் திருவாரூர் திரு. தங்கராசு,

காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. குமரி அனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முதல்வர் அவர்கள், மொழிப் பிரச்சனை குறித்து, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

''இந்தித் திணிப்புப் பற்றிய தமிழக மக்களின் கருத்தைத் தீர்மானமாக அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் உருவாக்கி, அடுத்து நடைபெற இருக்கிற சட்டசபைக் கூட்டத் தொடரில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது.

''இது சம்பந்தமான தீர்மானம், முன்னதாகவே அனைத்துக் கட்சிகளுடன் கலந்து பேசித் தயாரிக்கப்படும்.

பொதுவாக, இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலும், தமிழ்மொழியைப் பாதுகாப்பதிலும் தமிழக மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதிலும் தமிழக அரசு எவ்வளவு முனைப்போடு உள்ளது என்பதனையும், இப்பிரச்னைக்குத் தமிழக அரசு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதையும் இந்தக் கூட்டம் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்திருந்தது!

# நாட்டுக்கு எதுதேவை

—டாக்டர்
ஏ. லட்சுமணசாமி முதலியார்

இந்தியாவை ஐக்கியமும், திருப்தியும் செழிப்பும் உள்ள சமுதாயமாகச் சமைப்பதே இன்றைய தேவை. இவ்விஷயமாக நாடு சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் பல உள்ளன. தேசத்தின் சக்திகளைத் திரட்டி இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதிலேயே ஈடுபடுத்த வேண்டிய தருணம் இது

இச்சமயத்தில், தக்க பாகுபாடு செய்து பார்க்கக்கூடிய யாரும் இரண்டாந்தரமாகக் கருதக்கூடிய மொழிப் பிரச்னையில் கவனம் திருப்பப்பட்டிருப்பதையும், கருத்து வேற்றுமைகளும் பூசல்களும் கிளம்பியிருப்பதையும் துர்பாக்கியமன்றே கருதுவர். 'எல்லா மக்களும் ஒரே மொழியைப் பேசினால்தான் ஒரு நாட்டின் ஐக்கியம் வலியுறும்' என்ற வாதம் சரித்திர உண்மைகளுக்குப் புறம்பானது. ஸ்விட்சர்லாந்து, கனடா, தென் ஆப்பிரிக்கா முதலிய பல நாடுகள் குறைந்த ஜனத்தொகை கொண்டவை. எனினும் அவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுத்தப் பெறுகின்றன. நாற்பது கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு நாடு பல நூற்றாண்டுகளாகப் பன்மொழிகள் வழங்கி வந்த ஒரு நாடு-திடீரென தனது அரசியல் அலுவலகங்களுக்கு ஒரே பொது மொழியை வைத்துக் கொள்ள முடிவு செய்ததாக நாம் இதுவரை கேட்டதில்லை.

குறிப்பிட்ட ஒரு மொழியை நாற்பத்தைந்து சதவிகிதத்தினர் பேசுவதாகக் கூறுவதால் அப்படிக் கூறுபவர்களின் கோரிக்கை உண்மையாகி விடாது. நாற்பத்தைந்தென்ன? ஐம்பது சதவிகிதத்தினர் கூட ஒரு மொழியைப் பேசலாம். இந்தியைப் பேசுபவர்கள் எத்தனை சதவிகிதம் இருப்பினும் அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் சதவிகிதம் என்ன என்பதே இப்பிரச்னையின் நோக்கம்-முக்கியம். அவர்கள் இன்றும் சிறுபான்மையினரே.

ஒரு மொழி அந்நியம் என்றும் இன்னொரு மொழி சுதேசி என்றும் கூறுவது முழு உண்மையாகாது. அந்நியம், சுதேசி என்பது பல விஷயங்களைப் பொறுத்தது. இந்தி வழங்காத பகுதி மக்களில் பெரும்பாலோருக்கு இந்தியும் ஆங்கிலத்தைப் போலவே அந்நியம்தான். உணர்ச்சிகளை ஒரு பக்கம் வைப்போம். இந்தி பேசாத மக்கள் தங்கள் தேசப் பற்றைக் காட்டிக் கொள்வதற்கு இந்திய மொழி ஒன்றைப் பிரமாணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அவ்வாறு இந்தியாவில் வழங்கப்படும் மொழியை அறிவதொன்றாலேயே தேசப்பற்றை நிர்ணயிக்க வேண்டுமானால் அஸ்ஸாமிய மொழி, வங்காளி, பஞ்சாபி தென்னிந்திய மொழிகள் இவையும் இந்தி கோரும் அந்தஸ்துக்கு உரிமை கொண்டாடுவது நியாயமே!

நிற்க, பிரச்னையின் முக்கியமான அம்சம் இதுதான். இந்தியா அறிவுப் பாதையில் சென்று எல்லாத் துறைகளிலும் செயலாற்றவும், தினந்தோறும் வேகமாகப் மாறிவரும் இன்றைய உலகில் தனது பங்கை நிறைவேற்றவும் எது தேவை? ஐக்கியத்தை மொழி ஒன்றாலேயே ஏற்படுத்தலாம் என்றோ, தேச ஐக்கியத்தில் மொழி ஒரு முக்கியமான அம்சம் என்றோ கூட எண்ணுவது தவறாகும். ஐரோப்பிய மொழிகள் பலவற்றுக்குப் பொதுவான சொற்களைக் கொண்டு தயாரித்த எஸ்பெராண்டோ மொழியைப் பரப்ப வேண்டுமெனக் கூறி வந்தவர்கள் வெற்றி அடையாததற்கு இதுவே காரணம். விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் கனவேகமாக முன்னேறிவரும் இன்று பின்தங்கிய நாடுகள் முன்னேறிய நாடுகளுக்குச் சமமாக வரவேண்டும் என்று துடிக்கின்றன. இம்முறையில் நாடு விரைவில் முன்னேற எது உதவும் என்று சிந்திப்பதுதான் தேசத்தின் தேவையாகும்.

# அந்த நிலைக்கு உயர முடியாது!

— டாக்டர் சர். சி.பி

முதலாவதாக, தென்னிந்தியாவில் உள்ள நமக்கும் சரி, பாரதத்திலுள்ள யாருக்குமே சரி, அவரவர் தாய்மொழியை அல்லது பிரதேச மொழியைச் சிறுவர், சிறுமியரது ஆரம்பப் பருவத்திலிருந்து கற்பிக்க வேண்டும் என்பதில் எந்த மாறு பட்ட கருத்தும் கிடையாது. நமது பிரதேச மொழிகள் அவ்வளவு பழைமையும், பெருமையும் வாய்ந்தவை. ஆந்திர இலக்கியம் தோன்றிக் குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டுகளேனும் ஆகின்றன. கன்னட இலக்கியம் இதைவிடப் பழைமையான தாகக் கருதப்படுகிறது. எகிப்தில் ஆக்ஸிரிந்தஸ் என்ற இடத்திலுள்ள கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பேபிரிஸ் சின்னங்களில் கண்டெடுத்த கிரேக்க மொழி நாடகமொன்றில், கன்னட மொழிப் பதங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பழந்தமிழ் மொழியிலிருந்து விருத்தியான மலையாளம் அம்மொழியுடன் பொதுவான ஒரு மரபைப் பெற்றிருந்தது. பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டிலிருந்து தனி வாழ்வு பெற்று விளங்குகிறது. தமிழ் இலக்கியத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அது ஒப்பில்லாதது. குறைந்தபட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அது ஒரு தனிப்பட்ட பண்பாட்டு மரபை வளர்த்துள்ளது. கிறிஸ்து சகாப்தத்துக்கு மிகவும் முன்பிருந்தே தமிழ்ச் சங்கங்கள் மகோன்னதமான இலக்கியத்தைப் படைத்துள்ளன.

இது ஒருபுறம், மற்றொரு புறம் இந்தி. தரமான இந்தி என்று கருதப்படுவதும், தில்லியில் பேசப்படுவதுமான 'கரிபோலி' தனது தனி வாழ்வை, தனக்கென்று குறிப்பான அம்சங்களுள்ள வாழ்வை, பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தொடங்கிற்று. இது மறக்க முடியாத உண்மையாகும். இதற்கு முன் 'வ்ரஜ பாஜை' யிலும் 'புண்டேலி'யிலும் இலக்கியம் இருந்தது. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையுள்ள இந்தி இலக்கியம் வ்ரஜ பாஷை'யைச் சேர்ந்ததே என்றும் சூர்தாஸ், பூஷணர் முதலிய மகா கவிகள் இந்த மொழியில்தான் கவிதை இயற்றினர் என்றும் தேர்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர். இந்தி இலக்கியகர்த்தர்களில் மிகவும் புகழ் பெற்றவரும், 'ராம சரித மானஸ' ஆசிரியருமான துளசிதாஸர் அவதி மொழியில் எழுதினார். இது நவீன காலத்து இந்தியிலிருந்து நிச்சயமாக மாறுபட்டது. 'இந்தி இலக்கிய வரலாறு என்ற நூலில் ஸ்ரீ ராமச்சந்திர சுக்லா, இந்தி மொழி 1800-ல் தான் உபயோகத்துக்கு வந்த தென்றும், இந்தியில் இயல்நடை இலக்கியம் 1860-ல் தான் தொடங்கியது என்றும் கூறுகிறார். ஸ்ரீராம் நரேஷ் திரிபாடி தாம் எழுதிய உருது இலக்கிய வரலாற்றில் உருதுவும், வ்ரஜ பாஷையும் இந்தி மொழியைவிட வளத்திலும் விளக்கும் திறனிலும் சிறந்தவை என்கிறார். உருது இலக்கியம் தனது சிறப்புக்களை வலியுறுத்தி வருவதையும் நாம் கவனியாமலிருப்பதற்கில்லை. 'ராஜஸ்தானி'யே இந்தியிலிருந்து வேறுபட்ட தனி மொழியாகக் கருத வேண்டும் என்று ஒரு தீவிரமான இயக்கம் வற்புறுத்தி வருகிறது.

என்னுடைய முன்னுரையுடன் டாக்டர் ஸுநீதி குமார் சட்டர்ஜி 'நவ பாரதத்தின் மொழிகளும் இலக்கியங்களும்' என்பதாக ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். இதில் அவர், ''இன்று வழங்குகிற இலக்கிய இந்தி என்பது நூற்றைம்பதே ஆண்டுகளான சமீப காலத்திய மொழியாகும்'' என்று கூறுகிறார்.

---

## தமிழின் அருமையும் பெருமையும்!

பேரறிஞர் அண்ணா



தமிழ் மொழியைக் காத்தாக வேண்டும்; தமிழ் இனத்தை, தமிழ்ப் பண்பாட்டைக் காத்திடவேண்டும். இதற்கு இன்னும் ஐம்பது ஆண்டுகளாவது தொடர்ந்து உத்வேகத்துடன் பாடுபட்டால் தான் உலக வரலாற்றில் நாங்கள் தமிழர்கள் என்று தலை நிமிர்ந்து கூறக்கூடிய நிலை ஏற்படும்! எனவே புதிய வரலாற்றில் சிறப்பான அத்தியாயத்தை தோற்றுவிக்க வேண்டும். அந்த இலட்சியத்தை அடைய நான் மேற்கொள்ளும் பணியில் உங்களை பங்கு கொள்ள அழைக்கின்றேன். அண்ணனின் இந்த அழைப்பை அலட்சியப்படுத்த மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்; நம்முன் இருப்பது மகத்தான பணி.


*(30-12-66 விருகம்பாக்கம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா தலைமையுரை.)*



# படமும் செய்தியும்

புதுடெல்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் திரு. சர்ஜான் தாம்ஸன் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களை 16.1.1979 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள அணி வகுப்புத் திடலில் தியாகிகள் நாளன்று (30.1.1979) முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் தீண்டாமை ஒழிப்புக்கான உறுதிமொழி எடுக்கப் பட்டது.





சென்னை அறிஞர் அண்ணா நகரில் அமைந்துள்ள விசுவேசுவரய்யா கோபுரத்தில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 1.2.1979 அன்று ஒளி அலங்காரத்தை துவக்கி வைத்தார்.



ஆந்திர மாநில கூட்டுறவு அமைச்சர் தமிழக கூட்டுறவு அமைச்சர் அவர்களை கடந்த 31.1.1979 அன்று சந்தித்தார்.



திருச்சியில் 28.1.1979 அன்று கொண்டாடப்பட்ட அரிசன நாள் விழாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு முனுஆதி அவர்கள் சலவைப் பெட்டிகளை வழங்கினார்.



மலேசிய நாட்டு தலைமையமைச்சர் திரு. தத்தோ உசேன் பிங்குவான் அவர்களை 28.1.1979 அன்று சென்னை விமான நிலையத்தில் தமிழக முதல்வர் சந்தித்தார்.





தமிழ்நாடு அரசு சார்பில் சின்கோனாத் துறையின் சார்பில் உதகமண்டலத்தில் கட்டப்படும் 'தமிழ்நாடு ஸ்டிராய்ட்ஸ்' தொழிற்சாலைக்கு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.





மதுரை மாவட்டம் கருங்கோட்டான் குளத்தில் வேளாண்மை பாசனத்துக்காக பி. டி. ராசன் கால்வாயை மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு குழந்தைவேலு திறந்து வைத்தார்.



# அரசின் அறிவிப்புகளும்— ஆக்கப் பணிகளும்

**(16.1.79 முதல் 31.1.79 முடிய)**

*16—1—79*

வரும் கல்வியாண்டில் சேலத்தில் ஒன்றும், நீலகிரியில் ஒன்றுமாகப் புதிதாக இரு விவசாயிகள் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும். எனவே, எல்லா மாவட்டங்களிலும் விவசாயப் பயிற்சி நிலையங்கள் இருக்கும்.

தமிழ்நாடு கைவண்டிச் சட்டம். 1911 மற்றும் 1964ன்படி 1974-70 ஆம் ஆண்டுக்குச் சென்னை நகருக்காகப் பதிவு செய்யும் கைவண்டிகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| ஒற்றை மாட்டு வண்டிகள் | 55 |
| ஜட்கா | 60 |
| கைவண்டிகள் | 3000 |
| சைக்கிள் ரிக்ஷாக்கள் | 5900 |

*17—1—79*

தாம்பரம் மருத்துவமனையில் ரூ.90 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தொழுநோய்ப் பிரிவு மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப் பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைச் சுற்றி 15 கிலோ மீட்டர் அல்லது 20 கிலோ மீட்டர் வட்டாரத்திலுள்ள பள்ளிகளிலும், கல்விச் சாலைகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மறு பயிற்சிக்கான பாடத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

நடப்பாண்டு பொங்கல் நாளிலிருந்து நூல் நூற்கும் 10 ஆயிரம் பெண்களுக்குக் கூலி உயர்த்தப்படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் கூறியுள்ளார்.

சென்னை நகரப் பேருந்துகளில் தமிழில் அச்சடித்த பயணச் சீட்டுகளை வழங்கப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.

நிலமற்ற ஏழை மக்களுக்கு, இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 44 ஆயிரம் ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

*18—1—79*

வட சென்னை நாகூரான் குப்பத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தலா 50 கிலோ அரிசி, 100 ரூபாய், வேட்டி, சேலைகள், மீன் வலைகள் வழங்கப் பட்டன.

19—1—79

அறந்தாங்கியை அடுத்த நாகுடியில் 52 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கு வதற்கு 32 இலட்ச ரூபாய் செலவில் வெட்டிவயல் கிராமப்புறக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தமிழக மேலவைத் தலைவர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

20—1—79

மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம் பட்டி, திருமங்கலம் ஆகிய வட்டங் கள் வெள்ளப் பாதிப்புப் பகுதி களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

21—1—79

சேரன்மாதேவி தொகுதியில் முக் கூடலில் ரூ.24 இலட்சம் செல வில் நிறைவேற்றப்படவிருக்கும் குடிநீர்த் திட்டத்துக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழகத்தில் மதுவிலக்கைத் தீவிர மாக அமல்படுத்துவதால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட தேசிய் வரு வாயில் 10 சதவிகிதத்தைக் கொடுக்க வேண்டும் என்று டெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச் சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர் கள் வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டிலுள்ள பார்வையற் றோர் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தை மாற்றியமைக்க, பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் வேங்கட சுப்பிரமணியம் அவர்கள் தலைமை யில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

22—1—79

''இந்தித் திணிப்பை தடுத்து நிறுத்து வது என்பது யாருடைய தனிப்பட்ட பிரச்சினையும் அல்ல. அனைவரும் இதற்காக அணி திரளவேண்டும்.

தமிழும், இந்தியாவின் ஆட்சிமொழி யாகும் வரை, இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்பதை நாம் ஏற்கப் போவதில்லை'' என்று நெல்லையில் நடந்த தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் முதல்வர் அவர்கள் அறி வித்தார்.

மாநிலங்கள் தங்கள் 5 ஆண்டு (1978-83) திட்டங்களுக்கு ரூ.2650 கோடி கூடுதலாக மத்திய உதவி பெறும். தேசிய வளர்ச்சிக் கவுன்சில் குழுக்கூட்டத்தில் இதற்கான உடன் பாடு ஏற்பட்டது.


23—1—79

தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான ஊர்களில் மீன்வளத்துறை மூலம் கடைகள் திறக்கத் திட்டம் உள்ளது. மொத்தம் 960 கடைகள் திறக்கப் படும். இதன் மூலம் 2 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக் கும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சாரண இயக்கம் வளர்ச்சியடைவதற் கான எல்லா உதவிகளையும் தமிழக அரசு செய்யும் என்று முதல்வர் அவர்கள் மறைமலை நகரில் அமைந் துள்ள 'ஜம்போரி' விழாவில் கூறி னார்.

அறிஞர் அண்ணா நகரில், மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாடு அரசு ரூ.47 இலட்சம் செலவில் 'கூட்டுறவுப் பயிற்சிக்காக' பல மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டி வருகிறது. இந்த வேலை இன்னும் மூன்று மாதங்களில் முடிந்து விடும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறி யுள்ளார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள் விழா 23ந் தேதி மதுரையில் தமிழக அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர் களும் மற்றும் பல தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றி னார்கள்.



**24—1—79**

கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை கொடுக் வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் ஏற்பதாகவும், இது குறித்து அரசு விரைவில் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மழையால் பாதிக்கப்பட்ட சென்னை நகர் குடிசைப்பகுதிகளிலுள்ள 5555 குடும்பங்களுக்கு ஒரே நாளில் தலா 50 கிலோ அரிசி, துணி, பணம் வழங்கப்பட்டது.

**25—1—79**

மாவட்டந்தோறும் ஒரு அரும் பொருட்காட்சியகம் (மியூசியம்) ஏற்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டமாக, சேலத்தில் தற்போது இயங்கி வரும்அரும்பொருட்காட்சியகத்தைத் தமிழ்நாடு அரும்பொருட்காட்சியகத் துறை ஏற்று நடத்தவிருக்கிறது.

**26—1—79**

தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக கிராமப்புறங்களில் திறந்த வெளி நாடக அரங்குகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடந்த 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவில் தெரிவித்தார்.

**27—1—79**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, ஆடை, உதவித் தொகை முதலியன ஒரே நாளில் பெரம்பூர், புரசைவாக்கம், வியாசர் பாடி, அண்ணா நகர், ஆர்க்காடு சாலை, ரங்கராஜபுரம், தண்டையார்ப்பேட்டை ஆகிய பகுதிகளில் வழங்கப்பட்டன.

**28—1—79**

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட விரிவாக்கப் பணிகள் இன்னும் ஒரு மாதத்தில் துவக்கப்படவிருக்கின்றன. இந்த விரிவாக்கத் திட்டத்தின்கீழ், பல்லடம் தொகுதியில் மட்டும் சுமார் 25,000 ஏக்கர் வறண்ட நிலங்கள் புதிதாகப் பாசனவசதி பெறும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்துள்ளார்.

**29—1—79**

மக்கள் வரிப்பணத்தில் உருவாகும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள், தமிழ்நாடு துரிதவண்டியில் 21 பெட்டிகள் விடும் விழாவில் கூறினார். இந்தியத் துணைக் கண்டத்திலேயே மின்னல் வேக ரயில்களில் 21 பெட்டிகள் கொண்ட முதல் ரயிலாக, தமிழ்நாடு துரிதவண்டி (Tamilnadu Express) விளங்குகிறது.

**30—1—79**

தேசத் தந்தை காந்தியடிகளின் நினைவு நாளை முன்னிட்டு தியாகிகள் தினம் கொண்டாடப்பட்டது. கோட்டையில் முதல்வர் அவர்கள் தலைமையில் பல்லாயிரம் பேர் கலந்து கொண்டு மௌன அஞ்சலி செலுத்தித் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

**31—1—79**

மனிதன் மலத்தைக் குழிகளிலிருந்து மனிதனே அள்ளிச் சுத்தம் செய்யும் முறை ஒழிக்கப்படுகிறது. துப்புரவுப் பணியாளர்களுக்கு, உதவும் முறையில் மலத்தை அள்ள முதற் கட்டமாக ரூ.50 இலட்சம் செலவில் புதிய இயந்திரம் வாங்கப்படுகிறது. இந்தத் திட்டம் ரூ.6 கோடிச் செலவில் தீட்டப்படுகிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் கூறியுள்ளார்.

திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று மதுரை மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிப்ரவரி முதல் தேதியிலிருந்து மார்ச் 31ந் தேதி வரை சென்னையில் 5 இடங்களில் குடும்பநல முகாம்களை நடத்தி, 4 ஆயிரம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய, சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ரூ.125 உதவித் தொகை வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியில் பணி புரியும் 2,800 ஆசிரியர்களின் சிறு சேமிப்புப் பணத்தை அவர்கள் பணி புரியும் இடத்திலேயே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பிள்ளை பெற விரும்புவோர்க்கு ஓர் ஆலோசனை

**முதல் குழந்தை இப்பொழுது வேண்டாம்**


**இரண்டாவதுக்கு இடைவெளி இருக்கட்டும்**


**மூன்றாவது வேண்டாம்! வேண்டாம்!**

அருகிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தினரும் ஆரம்ப சுகாதார நிலையத்தினரும் ஆலோசனை சொல்வதுடன் சேவை வசதிகளையும் செய்து கொடுக்கின்றனர்.

இன்றே அவர்களை சந்தியுங்கள்

davp 78/484.







# நெல்லைச் சீமையில் தந்தைபெரியார் நூற்றாண்டு விழா

பகுத்தறிவுப் பகலவன்-சமுதாய சீர்திருத்தத் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி நெல்லை நகரம் வரலாறு காணாத வகையில் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் சார்பில் சனவரித் திங்கள் 20, 21 ஆகிய இரு நாட்களில் ம.தி.தா. இந்துக் கல்லூரி மேல்நிலைப் பள்ளித் திடலிலும், சாஃப்டர் நிலைப் பள்ளித் திடலிலும் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

20ந் தேதி மாலை 4 மணி அளவில் பத்தமடை ராஜா அவர்களின் மங்கல இசையுடன் விழா ம.தி.தா. இந்துக்கல்லூரி மேல்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் தொடங்கியது.

கோவில்பட்டி திரு ஈ.வே.அ. வள்ளிமுத்து அவர்கள் விழாவிற்கு வந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

புதுடில்லியில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியாக உள்ள திரு க. இராசாராம் அவர்கள் விழாவினைத்தொடங்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்து கொண்டு இருந்தார். ஓய்வு எடுத்ததை நான் பார்க்கவில்லை. எழுதிக் கொண்டிருப்பார். இல்லையென்றால் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார். பொது வாழ்க்கையில் நாணயம், மரியாதை, ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தார்; அதன்படி வாழ்ந்தும் காட்டினார்.

''ஒவ்வொரு துறையிலும் பெரியார் முன்னோடியாக விளங்கியிருக்கிறார். ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ளும்போது அது மனிதகுலம் முன்னேற உதவுமா என்று பார்த்த பின்னரே திட்டம் தீட்டி, பிரச்சாரம் செய்வார். அவ்வாறு எந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்வாரோ அதிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

''பதவியை விரும்பாதவர். அதனால் அவர் மந்திரி பதவியினை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஆனால், பதவியில் உள்ளவர்களிடம் என்னென்ன சாதிக்க முடியுமோ அத்தனையும் சாதிக்கும் தன்மையை உடையவர், அதனால்தான் வ.உ.சி. காந்தி, திரு.வி.க. மற்றும் பல பெரியவர்கள் அவரைப் பாராட்டியுள்ளார்கள்''

விழாவிற்கு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கிப்பேசுகையில் ''சமுதாயத் தொண்டு என்பதற்கு, பெரியார் தான் ஜீவநதி என்றும், அதிலிருந்து பிரிந்த பல கிளைகள் தான் இன்று பல அரசியல் கட்சிகளாகச் சமுதாயத் தொண்டு புரிந்து வருகின்றன'' என்றும் குறிப்பிட்டார்.

''திராவிட இயக்கம் ஒரு பாடப் புத்தகம் போன்றது, அதை நன்றாகப் படிக்க வேண்டும். படித்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும். திராவிடஇயக்கத்தை நிலைநாட்டக் கொடுத்த விலைகள் ஏராளம். இன்னும் கொடுக்க



வேண்டிய விலைகள் அதிகமாக இருக்கிறது. இந்த விழாவைக் கொண்டாடும்போது அந்த விலையைக் கொடுக்க நாமெல்லாம் தயாராக இருக்கிறோம் என்றும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்றார்.

விழாவில் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற கட்டுரை, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்கட்குப் பரிசுகளை வழங்கினார்.

கருத்தரங்கில் செங்கோட்டை திரு வி. சனார்த்தனம் (பகுத்தறிவுப் பகலவன் பெரியார்), திரு கே.ஆர்.பி. மணி மொழியன் (அறப்போர் வீரர் பெரியார்), திரு டி. சந்திரகாசன் (சீர்திருத்தச் செம்மல் பெரியார்), திரு எம்.பி. அழகியநம்பி (தன்மான வீரர் பெரியார்), பேராசிரியர் திரு பா. வளன் அரசு (மொழிப் போர் வீரர் பெரியார்), பேராசிரியர் திரு ந. இராமநாதன் (சிந்தனைச் சிற்பி பெரியார்), டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் (தமிழ்ச் சாக்கரடீஸ் பெரியார்), திரு கே.டி. கோசல்ராம் எம்.பி. (புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி பெரியார்) ஆகியோர் கருத்து மழை பொழிந்தார்கள்.

கருத்தரங்கில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: பெரியார் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தபோது சேரன்மாதேவி குற்றாலத்தில் நடைபெற்ற சாதிப்பாகுபாட்டு நிகழ்ச்சி அவரைப் பதவி துறக்க வைத்து தந்தை பெரியாராக மாற்றியது. தந்தை பெரியார், உலகத் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய வரலாற்றுச் சிறப்பினை, நாடு நன்றாக உணர்ந்துள்ளது. குறிப்பாக; இந்தக் கட்சியில் எத்தனையோ அரிய காரியங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுவரை எந்த அரசும் செய்யாத அளவில் பெரியார் நூற்றாண்டு விழாவை இந்த அரசு நடத்துகிறது என்றால், சில காரியங்களைச் சிலரால்தான் செய்ய முடியும் என்பதையே இது காட்டுகிறது'' என்றும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இரவு 10 மணியளவில் நடிப்பிசைப் புலவர் நாடகமன்றத்தார் பேரறிஞர் அண்ணா அவர்களின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தை சிறப்பாக நடித்தனர்.

21ந் தேதி காலை 9.30 மணியளவில் ம.தி.தா. இந்துக் கல்லூரி மேல் நிலைப் பள்ளித் திடலில் மகளிர் அரங்க நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கு, குற்றாலம் பராசக்தி கல்லூரி முதல்வர் செல்வி சே. பாகீரதி தலைமை தாங்கினார். பேராசியை விமலா சாமுவேல் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''தன் இலக்கிய வளத்தால் பெருமை பெற்ற ஷேக்ஸ்பியருக்காக அவரின் நூற்றாண்டுவிழா நிறைவுற்ற 4-வது ஆண்டில்தான் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடினார். ஆனால், பெரியாருக்கு இன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றோம். தொண்டுதான் பெரியாரின் உயிர் நாடி, அவர், தொண்டுள்ளம் கொண்டு வாழ்ந்தார். தனக்காக வாழாமல், சமுதாயத்திற்காக—சமுதாய மறுமலர்ச்சிக்காக வாழ்ந்தவர்.

''பெண் உரிமைக்காகப் போராடியவர் பெரியார் என்பதால் இன்று பெண்களாகிய நாம் ஒன்று கூடி அவருக்கு நன்றி கூறுகின்றோம். சமுதாயத்தில் ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஆண்களுக்கு ஐந்து ஆண்டுகளானால், பெண்களுக்கு இரண்டு ஆண்டுகள் போதும் என்றவர் பெரியார்.

''பெண்ணின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் வரதட்சணைக் கொடுமையை வேரோடு அழிக்கப் பாடுபட்டார். பெண் சமுதாயம் முன்னேற வேண்டும், பெண் பரிபூரண சுதந்திரம் பெறவேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி அடிகளைப் பின்பற்றி தந்தை பெரியாரும் பெண் உரிமைக்காகப் போராடினார்.

''பெண்ணினம் இன்று பெரியாருக்கு நன்றி கூறும் அளவில் அவரின் சீர்திருத்தக் கொள்கைகளை நிறைவுகாணும் வகையில் இந்த மகளிர் அரங்கம் இங்குச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவரின் கொள்கைகளை அவரின் சமுதாயச் சீர்திருத்தங்களை இந்நாட்டில் பரப்ப நாம் ஒன்றுபடுவோம். உயர்வு பெறுவோம். வேறுபாடுகளை நீக்கி, சமுதாயக் கறைகளை தகர்த்தெறியப் பாடுபடுவோம் என்றார்.

விழாவில் பேராசிரியை சரசுவதி இராமநாதன், பேராசியை உமா மகேசுவரி, திருமதி தி. சுந்தராம்பாள், திருமதி மாலதி அரிஇந்திரன், திருமதி ஆண்டாள் ரவுத், செல்வி நளினி நீலமணி (மாணவி) ஆகியோர் பெரியாரின் சிறப்பியல்புகளை விளக்கினார்கள்.

அடுத்து, கவியரங்க நிகழ்ச்சி தொடங்கியது. கவியரங்க நிகழ்ச்சிக்குக் கவிஞர் புலமைப் பித்தன் எம்.எல்.சி. அவர்கள் தலைமை தாங்கி, எளிய நடை



யில் நகைச்சுவையாக இரு பொருள்பட கவிதையில் பெரியாரின் சிறப்புப் பற்றிக் கூறினார். கிராமக் கைத்தொழில் துறைத் தலைவர் திரு பாளை. நாராயணசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கவியரங்கத்தில் பல்வேறு தலைப்புக்களில் கவிஞர்கள் தந்தை பெரியாருக்குக் கவிதை மாலை சூட்டினார்கள். கவியரங்க நிகழ்ச்சிக்குப் பெண்கள் அதிகமான அளவில் திரளாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். திருமதி மனோன்மணி இரவீந்திரன் (பெண்ணடிமை சாடிய பெரியார்), கவிஞர் இ. முத்துராமலிங்கம் (பெண்ணுரிமை பேணிய பெருந்தகை), கவிஞர் நாஞ்சில் நெடுமாறன் (பண்புகளின் பாசறை), புலவர் மீ.சே. கிரகோரி (வைக்கம் வீரர்) புலவர் சா. பாலசுந்தரம் (எழுச்சி மிகு எழுத்தாளர்), புலவர் தளவை முத்தரசு (போராட்ட வீரர்) ஆகியோர் பங்கேற்றனர்.

மாலையில் நெல்லை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. நீண்ட சாலையின் இருபுறங்களிலும் வரிசை வரிசையாகக் குழல் விளக்குகளும் அதை இணைக்கும் தோரணங்கள் போன்ற 20 விளக்குகளும் இரவில் நகரை மைசூர் தசரா கால ஒளி அலங்காரம் போலக் காட்சி அளிக்கச் செய்திருந்தது.

4 மணி அளவில் ஊர்வலம் பாளையங்கோட்டை வ.உ.சி. திடலிலிருந்து புறப்பட்டு, தாமிரபரணி பாலம், புகை வண்டி மேம்பாலம், நான்கு ரத வீதிகள் ஆகியவற்றைக் கடந்து சாஃப்டர் மேல் நிலைப் பள்ளித் திடலை 7.30 மணி அளவில் அடைந்தது. இந்த ஊர்வலத்தின் நீளம் ஏறத்தாழ 8 கிலோ மீட்டர் ஆகும். ஊர்வலப் பாதையின் இருபுறமும் மக்கள் வெள்ளம் அலைமோதியது. பல நூற்றுக்கணக்கான அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஊர்வலத்தில் தந்தை பெரியாரின் வாழ்க்கையினை விளக்குகின்ற 18 அலங்கார வண்டிகள் சென்றன. கரக ஆட்டம், ஒயில் ஆட்டம், ஒயில்கும்மி, மேளங்கள், சிலம்பு, ராணியின் தீப்பந்தாட்டம், காவடி ஆட்டம், வில்லிசைப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சாரணப்படையினர், என்.சி.சி. படையினர், ஊர்க்காவல் படையினர், அனைத்துப் பள்ளிக் கல்லூரி, மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் சீருடையில் ஓர் அலங்கார



வண்டிக்கும், மற்றொரு அலங்கார வண்டிக்கும் இடையில் 400 பேர் என்ற அளவில் சாரி சாரியாக அணிவகுத்து வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

முதல் அலங்கார வண்டியில் நாதஸ்வரக் கலைஞர்கள் செந்தில் சின்னசுப்பையா குழுவினர் நாதஸ்வர இசை இசைத்தனர்.

ஊர்வலத்தின் இறுதியிலுள்ள அலங்கார வண்டியில் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், மாண்புமிகு அமைச்சர்கள் கே.ஏ. கிருஷ்ணசாமி, எஸ்.டி. சோமசுந்தரம், இராம. வீரப்பன், ஜி.ஆர். எட்மண்ட் ஆகியோர் வந்தனர்.

அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த மேடையிலிருந்து ஊர்வலத்தை முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பார்வையிட்டார். ஊர்வலம் ஓரிடத்தைக் கடக்க ஏறத்தாழ 1.30 மணி நேரம் ஆகியது.

இதுபோன்ற மாபெரும் ஊர்வலத்தை இதற்கு முன் நெல்லை நகர வரலாற்றில் கண்டதில்லை என்று நெல்லை மக்கள் பேசிக் கொண்டனர்.

சாஃப்டர் மேல்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில் இரண்டு கலப்புத்திருமண ஜோடிகளுக்குத் தமிழக அரசின் சார்பில் தங்கப் பதக்கங்களையும், ரொக்கப் பணமாக ரூ. இருநூறையும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்.

தூத்துக்குடி வி.வி.டி. தனபால் அவர்கள் ரூ.100 ஒவ்வொரு தம்பதிகளுக்கும் பரிசாக வழங்கினார்கள்.

விதவை மறுமணத் திட்டத்தின் கீழ் ஏழு ஜோடிகளுக்குத் தலா ரூ. 5000-க்கு 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்களை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார்கள்.

திரு ஆலடி அருணா எம்.பி. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவைத் தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''நெல்லை நகரம் இதுபோன்ற மக்கள் கூட்டத்தைக் கண்டதுமில்லை, இனிமேல் காணப் போவதுமில்லை''

டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விழாவினைத் தொடக்கிவைத்துப் பேசுகையில், ''நெல்லை நகர் பெருத்ததா அல்லது மக்கள் பெருத்தார்களா என்ற வகையில் ஊர்வலம் இருந்தது. சென்னையில் இறுதியில் (செப்டம்பர் மாதம்) மூன்று நாட்கள் விழா நடைபெறும்.

''தமிழகத்திற்குப் புகழ் தேடிக் கொடுத்த எல்லாத் தலைவர்கட்கும் புரட்சித் தலைவர்தான் விழா எடுக்கிறார். ஆனால், சில தலைவர்கள் தனக்குத்தான் விழா எடுப்பார்கள். மானமுடைய, மதிக்கத்தக்க சமுதாயமாக மனித சமுதாயத்தை மாற்றியவர் தந்தை பெரியார்.

''உலகத்திலே பெரியார்தான் பட்டிதொட்டியெல்லாம் எந்த வித வசதியுமின்றிச் சமுதாயக் கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி.

சரசுவதி, வணக்கத்துக்குரிய மதுரை மேயர் திரு எஸ். முத்து, திரு நெ.து. சுந்தரவடிவேலு, திரு அப்துல்வகாப் எம்.எல்.சி, திரு கோ.அழகர்சாமி எம்.எல்.ஏ, திரு ரா. கிருஷ்ணன், எம்.எல்.ஏ. திருவாரூர் திரு கே. தங்கராசு, திரு கோ. கலிவரதன், திரு எம். எஸ். சிவசாமி ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்களையும் சிறப்பியல்புகளையும் விளக்கிக் கூறினார்கள்.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, விழா நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி இங்கு நடந்த மாபெரும் ஊர்வலத்தைப் பார்த்தபோது, நான் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டேன்.

''அதிக அளவில் பெண்கள் கலந்துகொண்டார்கள் என்பதற்காக நான் மகிழ்ச்சி அடையவில்லை. பெண் உரிமைக்காகப் பாடுபட்டவர் பெரியார். அப்படிப்பட்டவருக்கு நடக்கும் விழாவில் திண்மையோடு பெண்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டதைப் பார்க்கும்போது, பெரியாரின் கருத்துக்கள் கானல் நீராகிவிடாமல் நிறைவேறி வருவதைச் சுட்டிக்காட்டத்தான் அவ்வாறு கூறினேன்.

''தமிழக அரசைப் பொறுத்தவரையில் எந்தப் பிரச்சினையும் நாட்டு மக்களை முன்வைத்துத்தான் சிந்தித்துச் செயல்படுகிறதே தவிர எங்களை வைத்து நாங்கள் பிரச்னையை அணுகவில்லை.

எங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக இந்த விழா நடத்தப்படவில்லை. ஒரு அரசியல் கட்சிக்குமட்டும் - ஓர் சாதிக்கு மட்டும் விசேஷ முக்கியத்துவம் தரும் விழா அல்ல இது.

''இந்தி எதிர்ப்புப் போராட்டம் வரப்போகிறது என்றும், அதற்கு இலட்சக்கணக்கான தொண்டர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். அத்தனை மக்களையும் பலி கொடுத்துத் தான் இந்தியைத் தடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்படாது. இந்தியை இனிமேல் நம் மீது திணிக்கும் துணிவு யாருக்கும் வராது.

## எல்லா மொழியும் சமமே!

ஆட்சி மொழி பற்றிப் பேசும்போது பெரும்பான்மையோரால் அமைதியாகவும் புத்திபூர்வமாகவும் விவாதிக்க முடிவதில்லை. உடனே உணர்ச்சி வசப்பட்டுப் போகிறார்கள். 'அரசியல் சட்டத்தின் மீது ஆணை' என்று கர்ஜிக்கிறார்கள். இந்தி ஆட்சி மொழியாக இருக்கலாகாது என்று சொல்லுவோரெல்லாம் தேசத் துரோகிகள் என்று கண்டிக்கிறார்கள். மத்திய அரசாங்க நிர்வாகத்தில் ஆங்கிலம் துளியேனும் இடம் பெற்றால் பல தீமைகள் விளையும் என்று பயமுறுத்துகிறார்கள். ஆனால் இவ்விதம் உணர்ச்சி வசப்பட்டுப் போனால் இப்பிரச்சினையின் முக்கியமான ஆதார அம்சங்களைச் சரிவரப் புரிந்துக்கொள்ள முடியாது. அமைதியுடனேயே ஆராய்தல் வேண்டும்.

இந்தியா பல மொழிகள் பேசப்படும் நாடு. பல ராஜ்யங்கள் ஒன்றாக இணைந்து திகழும் ஐக்கிய தேசம். இந்த ராஜ்யங்கள் எல்லாம், ஏறக்குறைய தனித் தனி மொழி பேசப்படும் தனிப் பிரதேசங்கள். இரண்டாவது, பிரதானமாக உள்ள பிராந்திய மொழிகள் எல்லாம் ஏறக்குறைய சமமான வளர்ச்சி அடைந்துள்ள மொழிகளே. எந்த ஒரு மொழியும் மற்ற மொழியைக் காட்டிலும், ஆட்சி மொழியாக இருப்பதற்கு அதிக தகுதியுள்ளது என்று சொல்ல முடியாது.

—பேராசிரியர் டி. டி. கார்வே.



''வருகிற 23ந் தேதி இந்தித் திணிப்பு பற்றி முடிவு எடுக்க அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துள்ளேன்.

''இந்தித் திணிப்புக்கு ஆதாரம் இருக்குமானால், நாம் அனைவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

''தமிழர்-தமிழ் மொழி-தமிழ் நாடு என்ற ஒரே குறிக்கோளைத் தவிர வேறு எந்தப் பிரச்சினைக்கும் இடம் இல்லை. நிபந்தனைகளை யார் வேண்டுமானாலும் விதிக்கலாம். 65ஆம் ஆண்டு இருந்த நிலை வேறு. இப்போது உள்ள நிலை வேறு.

''இந்தி பேசும் மக்கள் உள்ள மாநிலத்தில் இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற உரிமை இருக்கும்போது இந்தி தாய் மொழியாக அல்லாத மாநிலங்களில் அந்த மாநில மொழிகள் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கேட்க உரிமை இருக்கிறது.

''இந்தி ஆட்சிமொழியானால்-தமிழும் ஆட்சிமொழி ஆகும் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அதுவே நம்முடைய கொள்கையாகும். அந்த முடிவை நாம் எப்போது எடுக்கப் போகிறோம் என்பதுதான் முக்கியம்.''

விழா நடந்த மைதானம் முழுவதும் கூட்டம் அலை மோதியது. இரவு 12.30 மணி வரை விழா நடந்தது. அதுவரை கூட்டம் கலையவே இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். சண்முகம் நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு
—அ. மருதவினாயகம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.














நெல்லையில்
தந்தை பெரியார்
நூற்றாண்டு விழா
(1979 ஜனவரி
20-21)
கருத்து விளக்க
அலங்கார
வண்டிகள்












பதிவு எண். M. 8676

